போன் நெ 15 · விலை 2 அணா. · REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 28—3—54 | இதழ் 39

செய்யட்டும் பார்க்கலாம்!

மாயவரம் நண்பர் சம்பந்தம், சென்னை சட்டசபையில், 'ரசமான விஷயம்' ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆண்டாண்டு காலமாக இருந்து வரும் 'அந்த விஷயத்தை' எண்ணும்போது, கேலி தென்படும்—உலகம் அறிந்தோருக்கு. ஆனால், சிந்திக்கும்போது, தேள் கொட்டுவதாக இருக்கும்.

நாம் பல்லாண்டு காலமாகக் கூறி வருவதையே, நண்பர் எதிரொலித்திருக்கிறார்.

இந்த எதிரொலிக்கு, ஆட்சியாளர் சார்பில், தக்கதோர் பதிலில்லை. காரணம், அன்பர் ஆச்சாரியார், அன்றைய தினம் சபைக்கு வராதது தான்போலும்!

ஆச்சாரியார் வந்திருந்தாலும், அன்பர் குறிப்பிட்டதற்கு, என்ன பதிலைக் கூறமுடியும்? ஆகம புராணங்களை வாதுக்கழைத்தோ, குட்டிக்கதைகளைச் சிருஷ்டித்தோ, 'கொல்லைப்புற வழி'களைத் தேட முடியுமே தவிர, நேர்மையான பதிலைக் கூறமுடியாது.

ஏனெனில், ஆச்சாரியாரும் அவரது குருமார்களும், நீண்ட காலமாகவே, இந்த 'விஷயம்'பற்றி, தக்கதோர் பதிலுரைத்ததில்லை. தெரியாததால் அல்ல; உரைத்தால் உண்மை வெளிப்படுமே என்ற பயத்தால்.

நண்பர் குறிப்பிட்ட 'விஷயம்' மிக மிகச் சாதாரணமானதுதான்.

"இந்திய உபகண்டத்தில், ஜாதி மத பேதமின்றி, எல்லோருக்கும் எல்லா உரிமைகளும் உண்டு"

"தகுதியிருந்தால், யாராயினும், எவ்வித உத்யோகங்களையும் வகிக்கலாம்"

என்றெல்லாம், நமது தேசிய நண்பர்கள், முழக்கமிடுகிறார்களல்லவா? அதை மனதில் வைத்தே அன்பர் சம்பந்தம் கேட்டிருக்கிறார்—

"கோயில்களில் அர்ச்சகர்களாக இருக்கும் பொறுப்புகள் அனைத்தும் பார்ப்பனர்கள்வசமே இருக்கின்றனவே! அதற்குப் பதில் அந்த வேலைகளில் ஈடுபட, இந்துக்களாக உள்ள எல்லோருக்கும் அனுமதி கிடைக்கும்படி செய்தால் என்ன?"

இதுதான், கேள்வி! இதனை யாரும் அர்த்தமற்ற கேள்வியென்று கூறமுடியாது. நாஸ்திகன் விடுத்த பாணமல்ல, இது! ஆண்டவன் சந்நிதானத்தின் முன்பு அனைவரும் சமம்—என்கின்றன, ஏடுகள். வேடுவர் குலத்துதித்த கண்ணப்ப நாயனார், தன்னுடைய காலைத் தூக்கி கடவுள் தலையில் வைத்துப் பக்தி சிரத்தையோடு பூஜை செய்ததால், பரமபதம் பெற்றார் என்று புராணங்கள் கூறுகின்றன, பக்தியுள்ளோர் எவராயினும், பகவானின் பாதங்களைத் தொட அருகதையுடையவர்கள் என்பதை, வேதாந்தியாயினும் சரி, சித்தாந்தியாயினும் சரி, யாரும் மறுக்கமுடியாது. அதனால்தான், அன்பர், இக்கேள்வியைக்கேட்டிருக்கிறார் — நாமும், நெடுங்காலமாகக் கேட்டு வருகிறோம்

மனிதனை மனிதனாகவே கருத வேண்டும்!—என்று கூறிவரும் காந்தீயப் பரம்பரையினர், என்ன கூறுவர்? ஆத்மாக்கள் யாவும் ஆண்டவன் அம்சமே!—என்று செப்பும் ஆச்சாரியார்கள், என்ன காரணம் காட்டி மறுப்பர்?

"ஐயோ! ஆண்டவனுடைய திருநாமப் பெருமைகளைச் சாதாரண வார்த்தைகளாலா எடுத்துரைக்க முடியும்? அதற்கென்று நம்முடைய மூதாதையர் எவ்வளவு ஸ்மிருதிகளை ஏற்படுத்திவைத்திருக்கின்றனர்! அந்த ஸ்மிருதிகளை எல்லாருமா கற்றுக்கொள்ளமுடியும்? சமஸ்கிருதம் அறிந்தோரன்றோ, அறிவர்-மொழிவர்'—என்று கூறக்கூடும். இந்தக் கூற்றைக் கேட்கும்பொழுது ஆண்டவனைத் துதிக்க 'பாஷை' எதுவாயிருந்தாலென்ன — தமிழ் வேதம் ஈஸ்வரனுக்குப் புரியாதா— என்ற கேள்விகளை, நாம் எழுப்ப விரும்பவில்லை. அவர்கள் கூறுவது போல், 'ஆண்டவனுக்கேற்ற மொழி சமஸ்கிருதமே!' என்பதை வாதத்துக்காக ஒப்புக்கொள்வோம். 'அந்த சமஸ்கிருதத்திலுள்ள மந்திரங்களே ஈஸ்வரனுக்கேற்றது' என்பதையும் ஏற்போம். ஆனால், அந்த மந்திரங்களைக் கற்றுத் தேர்ந்தவர் என்று எங்ஙனம் தகுதியை நிர்ணயித்திருக்கிறார்கள். எந்தப் பள்ளிக்

கூடத்தில், அர்ச்சகர்களும், ஆச்சாரிய ஸ்வாமிகளும் 'சர்ட்டிபிகேட்' பெற்றிருக்கிறார்கள்? இதைப்பற்றியும் நண்பர் சம்பந்தம் குறிப்பிட்டிருக்கிறார் — காரசாரமாக அல்ல; மிகவும் 'ரசமாக'வே குறிப்பிட்டிருக்கிறார்.

“கோயில்களில் அர்ச்சகர்களாக பணியாற்றுவோர், ஆகமங்களில் குறைந்தபட்சமாவது கற்றுத் தேர்ந்தவர்களாக இருக்கும்படி செய்ய வேண்டும்”

குறைந்தபட்சமாவது! — என்பதில் தொனிப்பது, கேலியல்ல; உண்மை.

இந்த உலகில் எந்தத் தொழிலில் ஈடுபடச் சென்றாலும், 'அதற்குள்ள தகுதி என்ன?' என்கிற கேள்வியே வீசப்படுகிறது, என்ன படித்திருக்கிறாய்? – தகுதி என்ன? – பழக்கம் உண்டா?–பரீட்சை 'பாஸ்' செய்திருக்கிறாயா?—இதுபோலக் கேட்கப்படுகிறது, ஆனால், இவ்வித 'கஷ்டம்' எதுவுமில்லாமல், 'அப்பனுக்குப் பிள்ளை' என்கிற ஒரே காரணத்துக்காகப் பாட்டரைப் பாத்யதை கொண்டாடக்கூடிய வழிகள் இரண்டில் முதலாவதாக இருப்பது இந்த மத ஆதிக்கம்! இரண்டாவது பண ஆதிக்கம்!

மத ஆதிக்கத்துறை, மனிதனை மேம்பாடுறச் செய்வதென்பதாகப் பேசப்படுகிறது. குப்பன் 72 வயதுக் கிழவன், கோயிலுக்குச் சென்று கும்பிட நினைத்தால், 15 வயது பார்த்தசாரதி — அவன் அர்ச்சகரின் மகன் என்கிற ஒரே காரணத்தால் –கோயில் காரியங்கள் எதையும் செய்யும்படியான வாய்ப்பைப் பெற்றிருக்கிறான். 72 வயதுக்குப்பன் 15 ஆண்டுப்பார்த்தசாரதியின் காலில் விழுகிறான்.

இந்தக் கொடுமை, முப்பத்து முக்கோடி தேவர்களைக் கொண்டிருக்கிற இந்து மதத்தைத் தவிர, வேறெங்கும் காணமுடியாது.

அதனால்தான், நண்பர் 'இந்த விஷயத்தை'க் குறிப்பிட்டிருக்கிறார்.

கண்டிக்கும் முறையிலோ, 'நான் ஓர் நாத்திகன்' என்று சொல்லிக் கொண்டோ, இவைகளைக் குறிப்பிடவில்லை.

ஆஸ்திக உள்ளங்கள் பதைக்காத முறையில், இரண்டு அடிப்படை விஷயங்களை எடுத்துரைத்துள்ளார்.

(1) எல்லோரும் அர்ச்சகராகக் கூடாதா?

(2) அர்ச்சகராக வருவோர், குறைந்தபட்சமாவது, ஆகமங்களைப் படித்திருக்கவேண்டும்.

மனித நீதிகளைப்பற்றியும், ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் என்றும், ஈஸ்வரனின் திருக்கலியாண குணங்களை யார் வேண்டுமானாலும் எடுத்துரைக்கலாமென்றும் கூறிடும் பகவத் பிரியர்கள், பாகவத சிரோன்மணிகள், இந்த யோசனைகளை ஏற்பரா? அவர்களின் ஆஸ்தானத் தலைவராக விளங்கும், ஆச்சாரியார் சம்மதிப்பாரா? அதற்கான சட்டங்களைச் செய்வாரா?

கோயில்களை இடிக்கச் சொல்லவில்லை—குறைந்தபட்சமான இந்தத் திருத்தங்களைச் செய்யமுடியுமா, அவரால்.

மனம் துணியுமா, முதலில்! துணிந்தாலும், விடுவரா, வேதவிற்பன்னர்கள்!!

சம்பந்தம் கூறிய சாதாரண திருத்தங்களைத் தாங்கக்கூடிய அளவுக்கு இந்துமத ஆதிக்கம் முன்வருமா? துணிந்து செய்ய 'தூயவர்' எனத் தோள் தட்டும் ஆச்சாரியார் முன்வருவாரா?—எங்கே, பார்க்கலாம்!

இலங்கைவாழ் திராவிடர்

[இலங்கைவாழ் திராவிடர் நிலை குறித்து, தி. மு. க. பொதுக்குழுவின் தீர்மானத்தை ஆதரித்தும் வரவேற்றும் இலங்கை தி. மு. க பொறுப்பாளர் தோழர் இரா அதிமணி அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்]

“7–3–54ல், திருச்சியில், அண்ணாதுரை அவர்களின் தலைமையில் நடைபெற்ற தி. மு. க. பொதுக் குழுவில், இலங்கை இந்திய உடன்படிக்கை குறித்து ஒரு சிறந்த தீர்மானம் நிறைவேற்றியிருப்பது காண மகிழ்கிறேன்.

பொதுவாக, நேரு–கொத்தலாவல உடன்படிக்கை இலங்கைவாழ் திராவிடப் பெருங்குடி மக்களுக்கு ஒரு பெருந் தீங்கையே உண்டுபண்ணி இருக்கிறது. இதை இந்தியப் பிரதமர் நேருவும் உணர்ந்தே இருக்கிறார். அவர். இ. இ. கா. பிரமுகர்கட்கு திருவனந்தபுரத்தில் அளித்த பேட்டியில், அதை மறைமுகமாக ஒப்புக்கொண்டிருக்கிறார். அதாவது “இந்த உடன்படிக்கையினால் எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்துவிட்டதாக நான் கருதவில்லை; ஆனால், வெற்றிக்கு முதல் படி இந்த ஒப்பந்தம்” என்று கூறியிருக்கிறார். அந்த முதற்படியே முற்றிலும் கோணலாக–முழுக்க முழுக்க ஆபத்து நிறைந்ததாக இருப்பதை அவர் அறியாமற்போனது விநோதம் மாத்திரமல்ல–விந்தையுங்கூட!

பொதுக்குழுவின் தீர்மானப்படி, இது முற்றும் தென்னாட்டவர்களின்–திராவிடர்களின் பிரச்னை. இது, தென்னாட்டு அரசியல் அறிஞர்களையும், ஆட்சியினரையும் கலந்தாலோசித்துதான் செய்யப்பட வேண்டும்.

அந்த ஒப்பந்தத்திற்கு ஒவ்வொரு நாளும், இலங்கைப் பிரதமரும் அவரது துணைவர்களும் கொடுத்துவரும் விளக்கங்கள், இன்னும் ஒருபடி மோசமாகவே போய்க்கொண்டிருக்கிறது இந்த நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் பண்டாரநாயகா, இந்தியர் கடைகளை பகிஷ்கரிக்கவேண்டுமெனவும், இந்தியர்களை வெளியேற்ற ஆண்கள் பெண்கள் படை திரட்டப்பட வேண்டுமெனவும் கூறி, அதற்கான நடவடிக்கைகளும் எடுத்துவருவது மிக மிக ஆபத்தானதாகவும் சமூக வெறியைத் தூண்டுவதாகவும் இருந்துவருகிறது.

இப்படிப்பட்ட ஆபத்தானவேளையில் தி.மு.க. பொதுக்குழு இலங்கை இந்திய உடன்படிக்கைபற்றிய தீர்மானம் நிறைவேற்றி, இலங்கைவாழ் திராவிட மக்களின் உரிமையை வற்புறுத்தியிருப்பது மகிழ்ச்சியையும் திருப்தியையும் தந்திருக்கிறது. இதுபோலவே, வருங்கால விளைவுகளிலும் தி. மு. க. இலங்கைவாழ் திராவிட மக்கள் குறித்து கண்ணும் கருத்துமாக இருந்துவருவர் என்று நம்புகிறேன்.”

*

தள்ளாடும், தறி!

"செய்யுந் தொழிலெல்லாம்
சீர்தூக்கிப் பார்த்தாலும்
நெய்யுந் தொழிற்கு நிகரில்லை"

என்பது, நமது நாட்டில் தொன்று தொட்டு வழங்கி வந்திருக்கும் பழமொழி. இதிலிருந்து, ஒரு காலத்தில் நெசவுத் தொழில், அதற்கு நிகராக வேறொரு தொழிலின்றி செவ்வனே நடைபெற்று வந்திருக்கிறது என்பது விளங்கும்.

முற்காலத்தில், தமிழ் நாட்டில், பருத்தியினாலும், பட்டினாலும் ஆடைகளும், ஆட்டு ரோமத்தினால் கம்பளங்களும், இன்னும் எலியினுடைய ரோமத்திலிருந்துங்கூட உயர்ந்த ரக துணிகளும் தயாரிக்கப்பட்டன என்பதற்கும், சான்றுகள் பல தமிழ் நூல்களில் காணப்படுகின்றன.

"நூலினும் மயிரினும்
நுழைநூற் பட்டினும்
பால்வகை தெரியாப்
பன்னூறடுக்கத்து
நறுமடி செறிந்த
அறுவை வீதியும்"

என்ற பகுதியை சிலப்பதிகாரத்தில் பார்க்கலாம். பாம்பின் சட்டை, மூங்கிலில் உரித்த மெல்லிய தோல், பால்நுரை, புகை, இவைபோன்ற பல பொருள்கள் ஆடைகளுக்கு உவமையாகப் பல்வேறு தமிழ் இலக்கியங்களில் உரைக்கப்பட்டிருப்பதிலிருந்து அக்காலத்தில் மெச்சத்தக்க விதத்தில் நெசவுத்தொழில் நடந்துவந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

தமிழகத்தின் நெசவின் நேர்த்தி தமிழரால்மட்டும் புகழ்ந்து கொண்டாடப்படவில்லை அக்காலத்தில் உலகின் மற்றப் பகுதிகளில் வாழ்ந்த மக்களும் போற்றக்கூடியதாயிருந்தது.

தமிழரால் தயாரிக்கப்பட்ட துணிகள் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் எகிப்துபோன்ற நாடுகளுக்குக்கூட அனுப்பப்பட்டன. இன்றைக்கு எகிப்தில் ஆராய்ச்சியாளர்களால் தோண்டி எடுக்கப்பட்டிருக்கும் புராதனகல்லறைகளில் கண்டெடுக்கப்பட்ட, அக்காலத்தில் புதைக்கப்பட்டு ஆனால் இன்னும் பதனமாக வைக்கப்பட்டிருக்கும் எகிப்திய மன்னர் வம்சத்தைச் சேர்ந்தவர்களின் சவங்களின்மேல் உடுத்திப் போர்த்தப்பட்டிருக்கும் துணிகள், ஒருகாலத்தில் தமிழ்நாட்டிலிருந்து எகிப்துக்கு அனுப்பப்பட்டதே என்பதை சரித்திராசிரியர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேகூட, கிரீஸ், ரோம் முதலிய நாடுகளுக்கு தமிழகத்திலிருந்து சென்ற சரக்குகளில், துணிதான் முக்கியமானதாயிருந்திருக்கிறது.

இருதயராஜ் பேராசிரியர்
செயிண்ட் ஜோசப் கல்லூரி
திருச்சி

நெசவுத் தொழில் சிறந்ததாக தமிழரால்மட்டுமின்றி, மற்றையோராலும் கருதப்பட்டு வந்த நாளில், நெசவாளர்கள் தமிழகத்தில் ஒவ்வொரு நகரத்திலும் காணப்பட்டனர். மணிமேகலையில் வஞ்சிமா நகரத்தின் சிறப்புகளைக் கூறுமிடத்து

"கண்ணுழை கல்லா
நுண்ணூல் கைவினை
வண்ண அறுவையர்
வளந்திகழ் மறுகும்"

என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

நெசவுத்தொழிலில் இன்று போலவே அன்றும் ஆடவர்மட்டுமல்ல, பெண்டிரும் ஈடுபட்டிருந்தனர். சில பெண்கள் இதுவே தொழிலாக இருந்திருந்தலால் அவர்கள் 'பருத்திப் பெண்டிர்' என்றே அழைக்கப்பட்டனர்.

"பருத்திப் பெண்டின்
பனுவலன்ன"

என்று புறநானூற்றில் குறிக்கப்பட்டிருக்கிறது. மேலும் நற்றிணை என்ற மற்றொரு நூலில் தோன்றும்

"ஆளில் பெண்டிர்
தாளின் செய்த
நுணங்கு நுண் பனுவல்"

என்ற அடிகளிலிருந்து பராமரிப்புக்கு ஆளின்றி அபலைகளாகவிருந்த பெண்கள், இத்தொழிலை மேற்கொண்டிருந்தனர் எனவும், நெசவுத் தொழில் நல்ல வருமானமுடையதாக இருந்திருக்கவேண்டும் எனவும் தெரிகிறது.

ஒரு காலத்தில் இவ்வளவு மேன்மையாக மதிக்கப்பட்டு வந்த நெசவுத்தொழில் இன்று நலிந்து கிடக்கிறது. விவசாயத்துக்கு அடுத்ததாக நம் நாட்டில் இன்றைக்கும் முக்கியத்துவம் வாய்ந்து இருந்த போதிலும், அது இன்றிருக்கும் நிலைமை, அதன் பண்டைப் பெருமையை நிலைநாட்டுவதாகவோ, நெசவாளருக்கு நிறைவாழ்வு அளிக்கக் கூடியதாகவோ இல்லை.

"இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்கள்மட்டும் அல்ல. தாழ்த்தப்பட்ட தொழில்துறைகளும் உண்டு" என்று மேனாட்டு அறிஞர் ஒருவர் கூறியிருக்கிறார். அவ்விதம் தாழ்த்தப்பட்ட தொழில்களிலே ஒன்றாகத்தான் இன்று நெசவுத்தொழில் காட்சியளிக்கிறது.

பண்டைய காலத்தில் பெருமையுடன் வாழ்ந்திருந்த நெசவாளர் சமுதாயத்தைப்பற்றி ஆராய்ந்து அறிந்தவர்கள், அது இன்று தாழ்ந்திருப்பதைக் கண்டால், அவசியம் இந்த நிலை ஏற்பட்டதற்குக் காரணம் கேட்காமலிருக்கமாட்டார்கள்.

இந்தியாவின் பல பாகங்களிலும் நெசவுத் தொழில் நடந்துவந்தது. வடநாட்டில் டாக்கா, ஆமதாபாத் முதலிய இடங்களில் பருத்தி நூல் துணிகளும், மூர்ஷிடாபாத், பெனாரஸ் போன்ற இடங்களில் பட்டு நூல் துணிகளும், காஷ்மீர்போன்ற இடங்களில் உயர்ந்தரகக் கம்பளங்களும் தயாரிக்கப்பட்டன. தென்னிந்தியாவில் ஆரணி, பூனா, காஞ்சி

புரம், சேலம், கோவை, திருச்சி, மதுரை முதலிய இடங்களிலும் நெசவுத் தொழில் நடந்துவந்தது. இங்கெல்லாம் தயாரிக்கப்பட்ட துணி வகைகள் உள்நாட்டுத்தேவைகளைப் பூர்த்திசெய்த பிறகு வெளிநாடுகளுக்கும் அனுப்பப்பட்டன. கைதேர்ந்த தொழிலாளிகளால் தயாரிக்கப்பட்ட கண்ணைக் கவரும் இந்தத் துணிகள்தான் இந்தியாவின் புராதனப் பெருமையைப் பிற நாடுகளுக்கு எடுத்துரைத்தன. இந்தியாவின் சிறப்புக்கு அவை சாட்சி கூறின. கண்ணைக் கவர்ந்த சரக்குகள் முடிவில் மேனாட்டினரின் கருத்தையும் கவர்ந்தன. இந்தியாவுடன் வாணிபம் செய்ய வெள்ளையர் வரத் தொடங்கினர்.

வந்தவர்கள் இங்கிருந்த ஆட்சி முறைகளைக் கண்டு நிரந்தரமாகத் தங்கி தங்களாட்சியை இங்கே நிறுவினார்கள். ஆரம்பத்தில் அங்காடி வைக்க வந்தவர்கள் இங்கு தங்கள் ஆட்சியை ஏற்படுத்தினார்கள். இவர்களில் முக்கியமானவர்கள் ஆங்கிலேயர்.

முதலில் ஆங்கிலேயர் இங்கு தயாரிக்கப்பட்ட நெசவுத் துணிகளை பிரிட்டனில் கொண்டுபோய் விற்றனர். அதற்குப்பதில் தங்கமும் வெள்ளியும் தந்தனர். ஆனால் இந்த வியாபார முறை இங்கிலாந்தில் அப்பொழுதிருந்த பொருளாதார நிபுணர்களால் கண்டிக்கப்பட்டது. "விலையுயர்ந்த இந்தியத் துணி அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றல்ல. அதில்லாமல் பிரிட்டிஷ் மக்கள் சிரமமின்றி வாழமுடியும், அதை பிரிட்டிஷ் மக்கள் வாங்கினால் அதற்கீடாக இங்கிருந்து திரவியத்தை அனுப்பவேண்டியிருக்கிறது. இந்த நிலைமை நீடித்தால் இங்கிலாந்தில் செல்வம் குன்றும். அதனால் வறுமை வளரும். இது தவிர்க்கப்படவேண்டும். இனி இந்தியாவிலிருந்து உயர்ந்த விலை மதிப்புள்ள இந்த சரக்குகளை இங்கிலாந்தில் இறக்குமதி செய்யக்கூடாது" என்று கண்டிப்பாய் உத்திரவிடப்பட்டது.

இருந்தபோதிலும் கிழக்கிந்திய கம்பெனி என்ற ஆங்கில வர்த்தக ஸ்தாபனம் இந்தியாவிலிருந்து இந்த சரக்குகளை வாங்குவதை நிறுத்தவில்லை. பின்னும் அவைகளை வாங்கிச்சென்று இங்கிலாந்தில் அவைகளை அதிகம் விற்பனை செய்யாமல் மற்ற ஐரோப்பிய நாடுகளில் விற்று அதனால் வரும் இலாபத்தை மட்டும் அடைந்துவந்தது.

இந்த நிலைமையில், இங்கிலாந்தில் "தொழிற் புரட்சி" ஏற்பட்டது. ஆலைகள் நிறுவப்பட்டன. அங்கு ஏராளமான துணிகள் மலிவாகத் தயாரிக்கப்பட்டன. தயாரிக்கப்பட்ட அத்தனை துணிகளும் செலவாக வேண்டுமென்றால் ஒரு மார்க்கெட் தேவைப்பட்டது. இந்தியாவைத் தவிர ஒரு சந்தை இங்கிலாந்துக்கு கிடைத்திருக்க முடியாது. அதனால் இங்கிலாந்தில் லங்காஷயர் பகுதியில் புதிதாக நிறுவப்பட்ட நூற்றுக்கணக்கான ஆலைகளில் பெருமளவில் தயாரிக்கப்பட்ட சரக்குகள் இந்தியாவில் கொண்டுவந்து குவிக்கப்பட்டன.

இந்திய நெசவுத் தொழிலுக்கு ஒரு சோதனைக் காலம் ஆரம்பமாயிற்று. கையினால் தறிகளில் தயாரிக்கப்பட்ட இந்தியத் துணி வெளியிலிருந்து வந்த ஆலைத் துணியை விட சிறந்திருந்த காரணத்தால் லங்காஷயர் துணி இங்கு எடுபடவில்லை. தரத்திலும் மக்கள் தேவையைப் பூர்த்திசெய்யக்கூடிய திறத்திலும் இந்தியத் துணியை மிஞ்ச முடியவில்லை, ஆங்கில ஆலைத் துணி. டாக்காவில் இந்தியர்கள் கையினால் நெய்த மஸ்லின் துணி எவ்வளவு மெல்லியதாக இருந்ததென்றால் இருபது கெஜத்துணியை உருட்டிச் சுற்றினாலும் அந்தச் சுருள் ஒரு கைவிரல் மோதிரத்திற்குள் இலகுவாக நுழையக்கூடிய அவ்வளவு நேர்த்தியாயிருந்தது. அதைப்போல துணி நெய்யவேண்டுமென்று விரும்பினான் லங்காஷயர் ஆலை முதலாளி. ஒருவன் முயற்சி செய்து, முடிவில் முடியாது என்று கண்டான். "இந்த டாக்கா மஸ்லினைத் துணியாகவே கருதக்கூடாது. அதைத் துணியின் நிழல் என்றுதான் சொல்லவேண்டும்" என்று கூறி தோல்வியை ஒப்புக்கொண்டான்.

ஆக இந்திய நெசவுத் தொழிலுடன் போட்டியிட்டு வெற்றி காண இயலாது என்று புரிந்துகொண்ட ஆங்கிலேயர் அத் தொழிலையே அழித்துவிட முயற்சித்தனர். கைதேர்ந்த நெசவாளிகளைத் தொழில் நடத்த முடியாமற் செய்வதற்காக அவர்களின் கட்டைவிரலை வெட்டினார்கள் என்றுகூட வரலாற்று ஏடுகளில் கூறப்பட்டிருக்கிறது. நெசவுத் தொழில் அழிந்ததற்கு ஆட்சியாளரின் இத்தகைய அடாத அழிவுச் செயல்கள் முதற் காரணமாயிருந்தன.

நாளடைவில் லங்காஷயர் ஆலைகள் விஞ்ஞானத்தின் உதவிகொண்டு புதிய புதிய நெசவு முறைகளைக் கண்டு பிடித்து மேலும் மேலும் மலிவாகத் தங்கள் துணிகளை இந்தியாவில் இறக்கினர். மேலும் மேலும் வலுத்துவந்த போட்டி ஒரு புறம்—ஆளுபவரின் கருணையற்ற செயல் மற்றொருபுறம் — இதற்கிடையே இருதலைக் கொள்ளி எறும்புபோல் தத்தளித்தது, இந்தப் புராதனத் தொழில்.

இது போதாதென்று காலக்கிரமத்தில் நாட்டிலே தோன்றிய பல மாறுதல்கள் இந்தத் தொழிலை அழிவுப் பாதைக்கு அழைத்துச் சென்றன. வெள்ளையர் இங்கு வருமுன்னர், மக்களுக்கு உயிர்நாடியாயிருந்த இந்தக் கைத் தொழிலை இந்நாட்டு முடிவேந்தர்கள் போற்றிப் பேணி வளர்த்துவந்தனர். தொழில் நிபுணர்களாயிருந்த பல நெசவாளர்களையும் அவர் குடும்பங்களையும் அரசர்களும் அவர்களை அடுத்த பிரபுக்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் பெரிதும் ஆதரித்து வந்தனர். நிபுணத்துவமுடைய நெசவாளிகள் தங்கள் கைத்திறத்தினால் தயாரித்த விலையுயர்ந்த பொருள்களை செல்வச் சீமான்கள்தான் வாங்கக்கூடிய நிலையிலிருந்தார்கள். ஆனால் ஆங்கிலேயரின் ஆட்சி ஏற்பட்டதும் முடி மன்னர்களெல்லாம் மறைந்துபோயினர். நெசவாளிகள் ஆதரவற்றவர்களானார்கள்.

ஆங்கில ஆட்சி ஏற்பட்டபின் நாட்டிலே செல்வம் மிகுந்தவர்கள், பெரிய உத்தியோகஸ்தர்கள், படித்தவர்கள் அத்தனைபேரும் மேனாட்டு

(13-ம் பக்கம் பார்க்க)

பட்டமரம், விட்டு!

ஆனந்தப்படுகிறார்! விருந்தளித்து மகிழ்கிறார்!!

பெருமிதமான வெற்றி பெற்றுவிட்டனர் எனக்கூறி, பெருமை அடைகிறார்.

ஆச்சாரியாரின் அருமை சீடர், 'கல்கி'யாருக்கே, இந்த ஆனந்தமும் மகிழ்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது

அண்மையில் திருவாங்கூர் கொச்சியில் அமைக்கப்பட்ட பிரஜா சோஷியலிஸ்டு ஆட்சியை ஆதரிப்பதாக காங்கிரஸ் தலைவர்கள் அறிவித்தனரல்லவா? அதுபற்றியே, அன்பருக்கு ஆனந்தமும் மகிழ்ச்சியும் அரும்பியிருக்கிறது!

"திருவாங்கூர் காங்கிரஸ் தலைவர்களுக்குக் கடைசியாக நல்லபுத்தி ஏற்பட்டிருக்கிறது என்று அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்" என்று 21-ந்தேதிய இதழில், தீட்டியிருக்கிறார்.

பிரஜா சோஷியலிஸ்டுகளை ஆதரிப்போம் என, அவர்கள் முடிவு கட்டியது—நல்ல புத்தியாம்! நவில்கிறார், நண்பர்!!

நேற்று முளைத்த கட்சி!—என்று கல்கியாரும் திருவாளர்களும், கிண்டல் செய்த கட்சி, பிரஜாசோஷியலிஸ்டுக் கட்சி. பூனையென்றும் எலியென்றும், கேலி செய்யப்பட்ட கட்சி. அதற்குத் துணைபோகிறது, பழம் சிங்கமென பாரதிர பறைசாற்றப்படும், காங்கிரஸ் கட்சி. அது பரமானந்தக் காட்சியாம்! பக்தர், செப்புகிறார்!!

தேர்தல் நடைபெற்றபோது, பிரஜாசோஷியலிஸ்டுகளை காங்கிரஸ்காரர்கள், எதிர்க்காமல் விட்டுவிடவில்லை. பலத்த போட்டியிட்டனர். கிருபளானியும், அசோகமேத்தாவும் தமது நண்பர்களுடன் திருவாங்கூரில் சுற்றுப்பயணம் செய்தனர். ஆங்காங்கும் காங்கிரஸ் புரட்டுகளை அம்பலமாக்கி, அதனைத் தோற்கடிக்கவேண்டும் என்று காரசாரமாகத் தாக்கினர். அதுபோலவே, காங்கிரசைத் தவிர வேறெந்தக் கட்சியும் நாட்டையாள இலாயக்கில்லை என்று சொல்லி, பண்டித நேருவும், கைலாசநாத கட்ஜுவும், மொரார்ஜிதேசாயும், பட்டேலும், ஆச்சாரியாரும், முழக்கமிட்டனர்—காங்கிரசே வெற்றிபெறவேண்டும் என்று எக்காளம் எழுப்பினர்.

பெருங்குரல், தோற்றது! எதிர்க்கட்சியினர், வாகை சூடியிருக்கிறார்கள்!!—இதற்குப் பின், காங்கிரஸ் கட்சி, பிரஜாசோஷியலிஸ்டுகளுக்கு 'பின்போவது' என்று முடிவு செய்திருக்கிறது. இதற்குப்பெயர், 'நல்ல புத்தி' ஏற்பட்டிருப்பதாம்! காங்கிரஸ் வீரர் 'கல்கி' கூறுகிறார்!!

இப்போது ஏற்பட்டிருக்கிற நல்லபுத்தி, அப்போதன்றோ, உண்டாகியிருக்கவேண்டும்? ஏற்பட்டதா! எத்தனை வீர முழக்கங்கள்—எவ்வளவு பெரிய தலையங்கங்கள்—யூகமான செய்திகள்—எல்லாம், அதிரச்செய்தன, கேரளத்தை. அப்போது, கல்கியார் குறிப்பிடும் 'நல்ல புத்தி'—திருவாங்கூர் காங்கிரஸ்காரர்களுக்கு மட்டுமல்ல—அகில இந்திய காங்கிரஸ் தலைவர்களுக்காவது, ஏற்பட்டதா! அவர்கள் கிடக்கட்டும்—இன்று, மகிழ்ந்தும் விருந்திட்டும் ஆனந்த ஆரவாரம் செய்கிறாரே, கல்கி, இவருக்காவது, ஏற்பட்டதா!! இல்லை—இவரும், திட்டினார், ஏனையகட்சிகளை. இவரது அரசியல் குருவான, ஆச்சாரியாரே சென்றார்—துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்யும், வீரரைப்போல. இருந்தும், காங்கிரஸ் கவ்வியது மண்ணை! வீரமாலை அணிந்தன, வேற்றுக் கட்சிகள்!!

இப்போது, விவேகபோதனை புரிகிறார், கல்கி, சாதாரண ஏடொன்றின் ஆசிரியரல்ல, அன்பர். காங்கிரசின் பெருமை—அங்கே கயவர்கள் புகுந்து கொண்டதால் ஏற்பட்ட நாணய வறுமை—அதை ஒழித்து முன்னேற்றம் காண வந்திருக்கும் ஆச்சாரியாரின் அருமை மகனைச் செய்ய அவரிடம் இருக்கும் திறமை ஆகியவைகளைப்பற்றி ஏடுபோதும் எழுதிக்கொண்டிருப்பவர் காங்கிரசுக்காக பல தியாகங்களைச் செய்ததாகச் செப்பி, அதன் நன்மைதீமைகளில் தனக்குமுரிமையுண்டெனக் கூறத் தவறாதவர். அவர் பள்ளுப் பாடுகிறார். யானை பூனையானதைக் கண்டு! ஆனந்த விருந்தளிக்கிறார், தோற்றப்பட்டோர் வெற்றி பெற்றதைக் கண்டு!!

*

காசும் மவுசும் கரையாத வரையில், 'கண்ணாளா! காதலா!!' என்றெல்லாம் கட்டிலறையில் கொஞ்சி, கனவான் மடி குறைகிறதென்றறிந்ததும், 'வீட்டுவாசல் ஏறாதே!' என்று விரட்டுவராம் வேசிகள். அன்பர் 'கல்கி'யார் 'வேறொரு' லோலனுக்கு வீட்டு விலாசம் தந்து உதவி புரிகிறார், 'என் அத்தான்!' என்று கூறி ஆனந்தப்படுகிறார்.

இந்த அரசியல் சுபாவம் அருவருக்கக்கூடியதென்பர்—நல்லோர். ஆனால், கல்கியார், துணிவுடன் செய்கிறார். வெற்றி பெற்றனர், பிரஜா சோஷியலிஸ்டுகள்! விருது பாடிப் பின் செல்கிறது, பெரிய கட்சி!!—இது விவேகமாம்—நல்ல புத்தி வந்ததற்கு, அடையாளமாம்.

ஏட்டில் தீட்டியதோடு, நின்றுவிடவில்லை. சென்னைக்கு வந்த பிரஜா சோஷியலிஸ்டுகளுக்கு. தன் வீட்டில் வரவேற்பு அளித்தாராம்! விருந்திட்டு உபசரித்தாராம்!! 21-ந்

மி. சு. இளமுருகு பொருட்செல்வி

எழுதிய

ஆடும் ஆச்சாரியார்

விலை அணா 0—8—0

விற்பனையாளர்க்கு கழிவு உண்டு

தபால் செலவு தனி.

தேவைக்கு:—

"நம்நாட்டுப்பண்ணை"

மணப்பாறை—திருச்சி மாவட்டம்.

தேசிய இதழில், அந்த விபரத்தை, படம் எடுத்துப்போட்டு, பரமானந்தப்பட்டிருக்கிறார்.

முகம் அன்றலர்ந்த செந்தாமரை போல் விளங்குகிறது!

'கல்கி'யார், ஆச்சாரிய கிருபளானியை, வர்ணிக்கிறார்—இவ்விதம்.

அடக்கமாக குனிந்த தலையுடன் நடந்து வருகிறவரைக் கவனித்துக் கொள்ளுங்கள். அவர் திருவாங்கூரில் தமிழர் வாழும் பிரதேசத்தில் தி. த. நா. க. அபேட்சகரை எதிர்த்து வெற்றி பெற்ற பிரஜா சோஷியலிஸ்டு.

அசோகமேத்தாவின் முகத்தில் தாடி வளர்கிறது— அவருடைய முகத்தில் எத்தனை எத்தனையோ சிந்தனைகள்.

திருவாங்கூர் பிரஜா சோஷியலிஸ்டு தலைவருக்கு 'கல்கி' ஆசிரியர் வாழ்த்துக்கூறி வரவேற்கிறார்.

இவ்வண்ணம், படங்களுக்கருகில் விளக்கம் கூறி, வர்ணனையும் வெளியிட்டுள்ளார்!

விருந்து—பாராட்டு—அகமலர்ச்சி—முகமன், இத்தனையும் பிரஜா சோஷியலிஸ்டுகளுக்கு வழங்குகிறார் கல்கி! ஆச்சாரியாரின் பிரதம சிஷ்யர்—காங்கிரசுக்காகவே ஏட்டையும் வாழ்வையும் அர்ப்பணித்திருப்பதாகக் கூறுபவர்.

மாற்றுக் கட்சித் தலைவர்களை வரவேற்பதும், உபசரிப்பதும், அரசியல் நாகரிகமாகும். மறுக்கவில்லை, நாம். ஆனால், அன்பர் கல்கி வரவேற்பதும் வாழ்த்துவதும், எல்லாக் கட்சித் தோழர்களையும் அல்ல— பிரஜா சோஷியலிஸ்டுகளை மட்டும்—பழைய பாசம்! எனலாம். இந்தப் பாசம், இத்தனை நாளும் இல்லாமல் இப்போதுமட்டும் ஏற்பட்டிருப்பானேன்?

ஆச்சாரிய கிருபளானி புதுக் கட்சி ஆரம்பித்தபோது, கண்டித்து எழுதியவர்.

அந்தக் கட்சியில் பிரகாசம் சேருவதை, கிண்டல் செய்து தீட்டியவர்.

அதே கட்சியுடன் சோஷியலிஸ்டுகள் சேருவதை, கேலி செய்தவர்.

"வெளியில் நின்று காங்கிரசின் கேடுகளை விளக்கும் கிருபளானி, காங்கிரசுக்குள்ளேயேயிருந்து அவைகளை அகற்ற, ஏன் போராடக் கூடாது?" என்று கேட்டவர்.

அவர், இன்று ஆனந்தப்படுகிறார்! வரவேற்பு வழங்குகிறார்!! — அன்றலர்ந்த செந்தாமரையை வர்ணனைக்கழைக்கிறார்!!!

பட்டமரத்தை விட்டு பழுத்த மரம் நோக்கிப் பாயுமாம், வெளவால். அந்தக் குணாநிசயம், அன்பருக் கேற்பட்டிருக்கிறது, இப்போது. சில தனிப்பட்ட நபர்களுக்கு இவ்வித ஆசைகள் வரும்—போகும். அது பெரிய விஷயமல்ல. ஆனால் கல்கி, தமிழகத்தின் தலைவிதிகளில் குறுக்கிடும் ஒரு கும்பலின் பிரதிநிதிகளில், ஒருவர் — காங்கிரசுக்காகப் பாடுபடுவதாகப் பறைசாற்றிக் கொண்டிருக்கும், நபர். அவரது போக்கு, இது! இதன் விளைவுகளையும், உள்ளெண்ணத்தையும் நாடு நன்றாக அறியும்—நம்முடைய ஆசை, காங்கிரசிலிருக்கும், நண்பர்கள் அறியவேண்டுமென்பதுதான்.

★ அந்தச் சந்தேகம்! ★

பண்டிதர்! ஆச்சாரியார்!!—இருவருக்குமுள்ள நெருங்கிய நட்பு, பாசம், பற்று குறித்து வர்ணிக்காத ஏடுகள், இல்லை.

எதுவாயினும் எங்களவரைக்கலக்காமல் செய்யார், பண்டிதநேரு!—என்று, அடிக்கடிகூறும் தேசிய ஏடுகள்.

சகஜமும், கூட. ஏனெனில், இருவரும், வெவ்வேறு கட்சியினரல்ல ஒரே கட்சி. ஒரே கட்சியிலிருக்கும் போது, ஒரே இலட்சியத்துக்குத்தானே, பாடுபடுவர்!

இருவர் உள்ளத்திலும், ஏறக்குறைய ஒரே விதமான எண்ணங்கள் தான் இருக்கும்—இலட்சியம், ஒன்றாதலால்!! அவ்விதம் இருப்பதுதான், இலட்சியத்தின்மீது ஒரே கட்சியினருக்குள்ள ஆர்வத்தையும் ஆசையையும் விளக்கும்.

ஆனால், அன்பர் பண்டிதர், இப்போது ஒரு உண்மையை வெளியிட்டிருக்கிறார்! யாரோ ஒருவர் கிளப்பிவிட்டாராம், ஒரு வதந்திச் செய்தி — இலங்கையில் கம்யூனிச எதிர்ப்பு மாநாடு கூடப்போவதாகவும், அதில் அமெரிக்க மெகார்த்தியும், விரட்டப்பட்ட சியாங்கே ஷேக்கும், கொரிய சிங்மன் ரீயும், சென்னை ஆச்சாரியாரும் கலந்து கொள்ளப்போவதாக.

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட பண்டிதர், சிரித்திருக்கலாம்! அல்லது, 'நமது ஆச்சாரியாரா, இப்படியெல்லாம் செய்வார்? விஷமிகளின் வேலை!' என்று மனதிடத்தோடு இருந்திருக்கலாம். இதுபோன்ற வேலைகளில் ஈடுபடுவது கூடாதென்பது காங்கிரசின் திட்டமென்றால், ஆச்சாரியாரும் உள்ளடங்கியவர்தானே!

ஆனால் பண்டிதர் இந்தச் செய்தியைக் கண்டதும் பரபரப்பு அடைந்து, சென்னைக்கு 'டெலிபோன்' செய்து ஆச்சாரியாரிடம், பேசியிருக்கிறார். அதைக்கேட்ட ஆச்சாரியார் மறுப்புச் செய்தியும் தந்தாராம்! தான் பேசிய விபரம் — ஆச்சாரியார் தந்த மறுப்புச்செய்தி இரண்டையும் பண்டிதநேரு, பார்லிமெண்டில் படித்திருக்கிறார்.

ஒரே கட்சி—உத்தம நண்பர்கள் —எனினும் இந்தச் சந்தேகம் ஏன் ஏற்படவேண்டும். அதுவும், பண்டிதருக்கு!

அவரே மறுக்கலாம்; ஆனால், மறுக்குமளவுக்கு பண்டிதர் மனதில் அச்சம் இருந்திருக்கிறது—அதனாலேயே 'டெலிபோனில்' ஆச்சாரியாரைக் கேட்டிருக்கிறார்.

இருவரும் நண்பர்கள்! ஒரே கட்சிக்காரர்கள்!!—எனினும் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது, பண்டிதருக்கு. ஏன்!!

★

வேங்கடசாமிக்கு
★ விண்ணப்பம் ★

நாயுடுகாருக்கு!

சட்டசபையில் நீர் செப்பிய வார்த்தைகளைச் செவியுற்றோம். சில மெம்பர்கள், உமது நெற்றியிலே உள்ள நாமத்தை நினைத்து, மத மந்திரியாகயிருப்பவர் 'விஷ்ணுப் பிரியராக' மட்டும் இருந்தால் போதுமா, என்று பேசி இருக்கிறார்கள். விளக்கம் சொன்ன நீர், மதபரிபாலன இலாக்காத்தலைவர் 'சிவப்பிரியர்' என்று செப்பி, என்னிடம் உள்ள குறைகளை அவர் நிவர்த்தித்து விடுவார் என்று பதிலளித்திருக்கிறீர். இந்தச் சட்டசபை மெம்பர்களிலே, சிலர் குறும்புக்காரர்கள்! 'வைணவத்துக்கு நீர்—சைவத்துக்கு, இலாக்கா தலைவர். சரி! வடகலைக்கு யார்? தென்கலைக்கு யார்? பிள்ளையார்மீது யாருக்கு பக்தி? லட்சுமியின்மீது ஆசை கொண்டோர், யார்?,' என்று ஆரம்பித்து வார்க்கோடியிலிருக்கும் மாடன், காளி, கூளிவரை கேள்விகேட்டுக் கொண்டேயிருப்பர்! என்ன செய்வது? 'ஏ, நாத்திகர்களே!,' என்று அவர்கள்மீது பாய்ந்துவிடுவதாலோ, 'மெம்பர்களே! நாத்திகர்களோடு நீங்களும் சேர்ந்திடாதீர்கள்,' என்று கெஞ்சுவதாலோ பிரயோஜனம் கிடையாது. ஏனெனில் நமது மதத்திலிருப்பதைத்தானே சொல்லுகிறார்கள்! அதுவும், நீர் 'மதமந்திரி' என்பதால் தானே சொல்லுகிறார்கள்!! ஆகவே, உமக்கு ஓர் யோசனையைக் கூறுகிறேன். 'அரியும், அரனும் ஒன்று,' என்பதை மெய்ப்பிக்கவும், இரண்டையும் சரிசமமாகப் பாவிக்கும் உள்ளம் உமக்கு உண்டென்பதை 'இந்தப் பாவி'கள் உணரவும், நெற்றியில் ஒரு பக்கம் நாமமும் மற்றோர் பக்கம் விபூதியும் இட்டுக் கொண்டுவாரும். அப்படிவந்தால் மற்றக் 'கடவுள் பிரியர்'களின் குறையைத் தீர்ப்பது எப்படி?—எனக் கேட்கலாம். எதுவும் கேட்டுக் கேட்டுச் செய்யக்கூடிய ஆள்தானே, நீர்! கேட்பீர். அதனால் அதையும் சொல்லிவைக்கிறேன்— எல்லாக் கடவுள்களையும் பாரபட்சமின்றி நிர்வகிப்பதைக் காட்டிக் கொள்ள, இவ்விதம் செய்யலாம்— ஒவ்வொரு கடவுளுக்கும் ஒவ்வோர் சின்னத்தை நமது முன்னோர்கள் வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.

காளிக்கு சூலம், அம்மனுக்கு வேப்பிலை—அய்யனுக்கு மண் குதிரை—இவ்வாறெல்லாம். நீர் எங்கு சென்றாலும், இந்தச் சின்னங்களோடு, செல்லும்! பிள்ளையாரின் பக்தர்களை எப்படிச் சமாதானப் படுத்துவது?—அதற்கும் வழி இருக்கிறது. கொழுக்கட்டை! அல்லது மூஞ்சூறு!— இவைகளில் ஒன்றை, சின்னமாகக் கொண்டு செல்லலாம். சில கடவுள்களுக்கு அநேகமாக எல்லாருக்கும்தான்! — இரண்டு மனைவிகள் உண்டு. அந்தக் கடவுள்களின் சின்னமாக அந்த 'முறை'யையும் அனுசரிக்கலாம். இது, உமது உள்ளத்தையும், குடும்பத்தையும், வசதியையும் கவனித்துச் செய்ய வேண்டிய விஷயம். இப்படிச் செய்வதில், உமக்கு ஆலோசனைகள் தேவை யென்றால்—நிச்சயம் தேவைதான்! எனக்குத் தெரியுமே!—ஒரு கமிட்டி அமைத்துக் கொள்ளும். இப்படியெல்லாம் செய்தால், உம்மைப்பற்றி யாரும், குறைகூற முடியாதல்லவா? ஏன், விசனப்படுகிறீர்! சட்டசபையில் இன்னோர் மெம்பர் கேட்டாரே மட ஆதீனங்களைப்பற்றி— அதை நினைத்துக் கொண்டீரா? ஆமாம்! நீர், அந்தக் கேள்விக்குச் சொன்னபதில், துளிகூட எனக்குப் பிடிக்கவில்லை. 'மட ஆதீனங்கள் சிலஒழுங்குதவறித்தான் நடந்து கொள்ளுகின்றன. என்ன செய்வதென்று, எனக்குத் தெரியவில்லை. அவைகளைக் கட்டுப்படுத்த சர்க்காரிடம் அதிகாரம் கிடையாது,' என்று பேசியிருக்கிறீரே! பேசலாமா? நாஸ்திகர்கள் பாடு கொண்டாட்டமாகி விடுமே! என்ன செய்வதென்று தெரியவில்லை —என்றா, சொல்வது? "அப்படி யாராவது நடந்தால், ஏ! கடவுளே— அவர்களைத் தண்டியும், என்று அனுதினமும் ஆயிரத்தெட்டு முறை ஆண்டவனை ஜபிக்கிறேன்— அன்பரே!," என்றல்லவா, பதில் கூறியிருக்கவேண்டும்.

நம்மால் முடியாது என்று சொன்னால் ஆண்டவனைக் காப்பாற்றும் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள், இந்த நாத்திகர்கள்? ஆகவே, இதுபோன்ற விஷயங்களில், கொஞ்சம் முன் ஜாக்கிரதையாகயிருக்கும்படி தெரிவிக்கிறேன். ஏனெனில் இந்துமதத்தைக் காப்பாற்றும் நமக்கு, எவ்வளவோ பள்ளங்கள் இருக்கின்றன! அவைகளைத்தாண்ட முடியாதபோது, 'ஆண்டவா!' என்று கூறிவிட வேண்டும். நமது ஆச்சாரியார் அவர்களிடமிருந்தும், இந்த விஷயத்தை நீர் தெரிந்து கொள்ளாமலிருப்பதைப்பற்றி, இங்குள்ள நம்மளவர்களுக்குச் சிறிது வருத்தமே. நிற்க, கோயில் பிரசாதமெல்லாம், சுகாதார முறைப்படி தயாரிக்கப்படுவதாக நீர் சொன்னது பற்றியும் — கொஞ்சம், எனக்கு அதிருப்திதான். பகவானுக்கு பக்தி சிரத்தை, தேவையா! சுகாதாரம் தேவையா!!— இனிமேல், பிரசாதத்தைப்பரிசோதிக்க, ஒரு 'சானிடரி இன்ஸ்பெக்டரை' வைக்கவேண்டும் என்று இந்த நாத்திகர்கள் கேட்க ஆரம்பித்தால், என்ன செய்வது? ஆகவே, இனிமேல் இதுபோன்ற கேள்விகள் வந்தால், பிரசாதங்கள் ருசியாகவே உள்ளன—பக்தி சிரத்தையோடு தயாரிக்கப்படுகின்றன—என்று சொல்லவும்.

இன்னும் ஏராளமான யோசனைகள் உண்டு. பிறகு, எழுதுகிறேன்.

விதேயன்,

வடகலை வரதன்.

குறிப்பு:- உம்முடைய 'மருந்துக் கடை'யில் 'பெனிசிலின்' புதிய 'ஸ்டாக்' வந்திருப்பதாகக் கேள்வி. பார்சல் மூலம், நாலைந்து புட்டி அனுப்பிவைக்கவும். கோயில் பக்தனுகிய நான், உடல் சுகவீனத்தோடு ஊருக்குள் செல்லும் போதெல்லாம், இந்த நாத்திகர்கள் கிண்டல் செய்கிறார்கள். உடம்பை, உடனே தேற்றிக் கொள்ளவேண்டும். கவனிக்கவும்.

★

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரிலீடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்கு முறை!!

திராவிடநாடு

காஞ்சி] 28—3—54 [ஞாயிறு

அழைக்கிறது, தஞ்சை!

★

தஞ்சை அழைக்கிறது, அறைகூவி! தன் மதிப்பியக்கத்தின் தங்கத் தரணி, திராவிடத்து மக்களையெல்லாம், அழைக்கிறது!!

வரும் திங்கள் 10, 11, தேதிகளில் நடைபெறவிருக்கும் தி.மு.க. மாவட்ட மாநாடுகளில் கலந்து கொள்ளுமாறு, எல்லோருக்கும் — அன்பழைப்பு விடுக்கிறது, தஞ்சை.

சென்னையில் நடைபெற்ற தி. மு. க. மாநாட்டுக்குப் பின், மீண்டும் தஞ்சையில் கூடப் போகிறோம். இடைவெளி, சில மாதங்கள் தான்! எனினும், இந்த மாதங்களில், என்னென்ன கண்டோம்.

வெள்ளுடை அணிந்துகொண்டு வீதியில் சென்றோர், சிவப்பு நிற ஆடையோடு திரும்பினர்! இரு கைகளுடன் சென்றோர், இழந்த ஒரு கரம் எங்கே போயிற்றென்று தெரியாது வந்தனர்! அழகுள்ள உடலுடன் சென்றோர், அவலட்சணங்களோடு, வந்தனர்! அன்றைய தினம் நம்மிடம் விடை பெற்றுச் சென்ற நூற்றுக்கணக்கான தோழர்களை இன்னும் சந்திக்கவில்லை, நாம்! தூத்துக்குடிச் சிறை, அத்தூயவர்களின், பாதம் பட்டு பட்டுத் தேய்ந்துகொண்டிருக்கிறது. கல்லக்குடிக் காளைகள், கடும் சிறையில் கிடக்கிறார்கள்! அறுவர் பிணமாகி, நமது கண்ணீரையும் நாட்டின் அன்பையும் பெற்றுக் கொண்டு போய்விட்டனர்! திராவிடத்தின் வீதிகளில் எங்கு சென்றாலும், 'இந்த அடி சென்னை மறியலின் விளைவு!' 'இது கடலூர் சிறையில் நான் பெற்ற அடி!' 'இது, தியாகராய நகரில் மண்டை உடைக்கப்பட்ட காயம்!' எனும் தியாகத் தழும்புகளோடும், சிறை சென்ற அனுபவங்களோடும், ஆறாயிரத்துக்கு மேற்பட்ட அருங்காளைகளைக் காண்கிறோம்.

அன்று துவக்கப்பட்ட கல்லக்குடி அறப்போரின் விளைவு, வெற்றியோடு காட்சி அளிக்கிறது! கல்வித் திட்ட எதிர்ப்புப் போர், சகல கட்சிகளின் ஆதரவையும் பெற்று, ஆச்சாரியாரின் கெடுமதியை அகில உலகத்துக்கும் எதிரொலித்துவிட்டது.

'அழிப்பேன்!' என்று ஓங்காரக் கூச்சலிட்டார், ஊராள வந்த உத்தமர், ஆச்சாரியார். அவர் மீண்டும் சட்ட சபையில் அமரும்போது, எம். எல். ஏ.க்கள் பலர், அவர் முன்னே 'திராவிடப் பார்லிமெண்டரி கட்சி' எனும் பெயருடனே அமர்ந்தனர்.

சட்டமெனும் சுறாவும், தண்டனை எனும் திமிங்கிலமும், தடியடியெனும் அலையும், குண்டுகள் எனும் குன்றுகளும், நம்மைத் தாக்கின— இடித்தன—வீழ்த்தின; அழிந்தோமில்லை! அயர்ந்தோமில்லை!! உந்திக் கிளம்பும் பந்தென, முகிலைக் கிழித்து வெளிவரும் முழுமதியென, எத்தர்களையும் ஏமாளிகளையும் பார்த்துக் கேலிச்சொல் வீசிய வண்ணம், புது ஒளியுடன் காட்சி தருகிறோம்!

வீணையுடன், ஐவரையும் சிறையில் போட்டு அடைக்க முயன்ற ஆச்சாரியாரின் கெடுமதியைக் கிள்ளி எறிந்தபடி, நீதிமன்றத்திலே நிற்கும் நமது வீரர்களை விடுவிக்கும் இலட்சியத்துடன், வீறுகொண்டெழுந்து நிற்கிறோம்! அடிபட்ட புலி, சீறுவதுபோல— அடக்குமுறைக்கு ஆளான தி.மு.க. வீரர்கள், அயரா உள்ளமும், தளரா ஆர்வமும் கொண்டோர்களாகக் காட்சியளிக்கின்றனர்—ஆங்காங்கும்.

இந்த அற்புதத்தின் சித்திரமாக, கூட இருக்கிறது, தஞ்சை மாநாடு. கடந்த அறப்போரில் ஆயிரக்கணக்கான வீரர்களை களத்துக்கு அனுப்பிய பூமி, தஞ்சை கடந்த பொதுத் தேர்தலின்போது, காங்கிரசுக்கு சமாதி கட்டிய பூமி, தஞ்சை. அந்த நஞ்செய் பூமி, நமது கழகத்தின் கோட்டம்! விளைந்து அறுக்கும் உழவர் பெருமக்கள் முன்னே, வியர்வையை நெல்லாக்கும் விவசாய வேந்தர்களின் தரணியிலே, கருத்துழவர்களாம் நாம், கூடப்போகிறோம்!

கழனி—நிலப்பிரபுக்கள் வசம் சிக்கிக் கிடப்பதுபோல, கள்ளியும் காளானும் எழும்பினாலும் கவலைப்படாது வீற்றிருக்கும் வடபாதி மங்கலங்களைப்போன்ற டில்லி ஆதிபத்யத்தின் பிடிப்பிலிருந்து, நஞ்செயும் புஞ்செயும் நிரம்பிய நந்தாயகத்தை மீட்கும் அரும்பணியிலீடுபட்டிருக்கிற நாம், கூடப்போகிறோம்.

அறப்போரிலீடுபட்டோரை வாழ்த்தவும் சிறைகளில் திகைக்கும் சீயங்களை வெளிக் கொணரவும், மக்கள் மன்றத்தை அலைக்கழிக்கும் ஆச்சாரியார் கல்வித்திட்டம் பற்றி எச்சரிக்கை எழுப்பவும், ஏறு நடை போடும் இளைஞர்களை, கடமையார்வம் தவறாத காளைகளை, அங்கே காணப்போகிறோம்!

முதல் நாள்—சீர்திருத்த மாநாடு; தமிழ்ப் பேராசியர் அன்பழகன் துவக்கிவைக்க, சட்டசபை உறுப்பினர் கோவிந்தசாமியின் தலைமையில் நடைபெறப் போகிறது.

இரண்டாம் நாள், கல்வித்திட்ட அறப்போர்க்குழுத் தலைவர் சம்பத், ஆரம்பித்துவைக்க, 'திராவிடன்'

ஆசிரியர் என். வி நடராசன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இந்த இரண்டு மாநாடுகளையும் சிறப்புற நடத்த வரவேற்புக் குழுவினர், ஏற்பாடுகளையெல்லாம் செய்து கொண்டுள்ளார்கள். உணர்ச்சிவிருந்தும், இலட்சியமுழக்கமும், தஞ்சைக் கோட்டையில், காட்சியளிக்கப்போகிறது!

சோழமண்டலத்தின் தொட்டிலில் நடைபெறப்போகும் இம்மாநாடுகளில் கலந்து கொள்ளுமாறு திராவிட மெங்குமுள்ள கழகத் தோழர்களை, அன்புடன் அழைக்கிறோம்.

கண்களில் புதுஒளியுடன் காட்சி தரும் செம்மல்களே! தியாகம் பல புரிந்த சிந்தனைச் சித்திரங்களே! கழகத்தின் குரலை எதிரொலிக்கும் இலட்சியச் சிற்பங்களாம் சொல்லேருழவர்களே! பாட்டாளித் தோழரே! பைந்தமிழ் மாணவரே! தாய்மாரே! எல்லோரையும், அழைக்கிறோம். வாரீர்! வெற்றி காட்ட வாரீர்!!

★

இப்போது சேர்ந்துள்ளதொகை, ஏழையின் வியர்வைத் துளிகள் என்றாலும், இல்லாதோரின் கூடாரமான, தி. மு. கவுக்கு, இத்தொகை தான், கன்னற்சாறு! களிக்கும் அமிர்தம்!!

இவ்வளவு பெரியதொகையை அணாக்களாகவும், ரூபாய்களாகவும் அனுப்பி, வீரர்களை விடுவிப்பதில் ஆர்வம் காட்டும் தாயகத்தோருக்கு, நமது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

★

வெற்றியும்—நன்றியும்

“அபராதத் தொகையை வசூலிப்போம்!”—என்றது, சர்க்கார்.

நீதிக்குமுன் நிற்பதென முடிவு செய்தோம்; நாம். நமது முடிவைக் கண்ட ஆச்சாரியார் சர்க்கார், உடனே பாணம் தொடுத்தது.

“ஐவர் அனுபவித்த தண்டனை போதாது மேலும் தண்டனை கிடைக்கும்படிச் செய்ய வேண்டும்”—என்று, நீதிமன்றத்தை நோக்கிச் சென்றது.

ஆட்சியாளரின் போக்கைக்கண்டு, மக்கள் மன்றம் சிரித்தது—சிந்தா கூலப்பட்டது.

இப்போது இந்த இரு வழக்குகளிலும், உயர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கிவிட்டது. இரு வழக்குகளையும், சமாசமாகத் தள்ளுபடிசெய்து விட்டது.

இந்த வழக்குகளின் விளைவால், நன்மை அடைய விரும்பியது, சர்க்கார்.

ஐவர் மீதும், தான் நடாத்திய அடக்கு முறையின் அளவை அதிகமாக்கவும், ஜாமீன் தொகையை வசூல்செய்யவும் தயாராகஇருந்தது.

வழக்குநடத்தவரிப்பணமிருக்கிறதென்னும் தைரியத்தில், மும்முரமாகவே இருந்தது.

ஆட்சியாளரின் கெடுபிடியையும் கெடுமதியையும் விளக்கும் சின்னமாக இருந்தது, ஐவர் வழக்கு.

இதனை, இப்போது தள்ளுபடி செய்திருக்கிறது, உயர் நீதிமன்றம்.

வழக்குத் தொடர்வதும், நடத்துவதும், ஆள்வோருக்கு ஓர் பொழுது போக்கு. நமக்கோ, உயிர் வாதை.

ஐவர்வழக்கு—முடிந்து விட்டது. ஆனால், முடியாத இரண்டு வழக்குகள் இருந்து கொண்டிருக்கின்றன. கல்லக்குடி வீரர்கள், 1½-ஆண்டுத் தண்டிக்கப்பட்டு, களியும் கஞ்சியுமாக, காராக்கிரகத்திலே கிடக்கிறார்கள். தீர்ப்பை எதிர்பார்த்து, தூத்துக்குடி தூயவர்கள், சிறைக்குள்ளே திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்; இந்த இரண்டு இடங்களிலும் கிடக்கும் நமது தோழர்களை நினைக்கும்போது, நம்முன்னுள்ள கடமையும் பொறுப்பும் காட்சி தருகிறது.

நீதியின்முன்னே ஆட்சியாளரின் கெடுபிடியைக்கொண்டு நிறுத்த ஓரளவு பணஉதவியை, மக்கள் மன்றம் வழங்கியிருப்பதற்கு நமது பொதுக்குழு, தன்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறது. எனினும், தோழர்கள் செய்ய வேண்டிய கடமைகள், குறைந்து விடவில்லை—வளர்ந்துகொண்டேவருகின்றன. காராக்கிரகத்திலே கிடக்கும் தோழர்களை நம்மத்தியில் கொண்டுவரவும், ஆள்வோரின் கெடுபிடியை அறமன்றத்தின்முன் நிறுத்தவும், இன்னும் அதிகமான தொகை தேவைப்படும்.

மனோகரா

செந்தமிழ் துள்ளி விளையாடுவதால் சிறப்படையும் பட வரிசைகளில் ஒன்றாகத்திகழ்கிறது, மனோகர் பிக்சர்ஸ் உரிமையாளர் M சோமசுந்தரம் அவர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப்பட்ட, ‘மனோகரா’. நாடகப்பேராசிரியர் சம்பந்தனாரின் இக் கதை தமிழகத்துக்கு அறிமுகமானதாகும்; எனினும் பழமையில் புதுமையைப் புகுத்தி, நாடும் ஏடும் பாராட்டுமளவுக்கு நல்லதோர் சித்திரமாக்கியிருக்கிறார், நமது மு. கருணாநிதி. வீரம் கொந்தளிக்கும் சொல் முழக்கமும், அதனைச் செவ்வனே செய்துமுடித்திருக்கும் சிவாஜி கணேசன், ராஜகுமாரி, கண்ணாம்பா, ராஜேந்திரன் ஆகியோரின் சிறந்த நடிப்பும், தமிழகத்தின் இதயத்தைக் கவர்ந்துவிட்டது. எனவேதான், கேலி பேசியோரும், சித்திரங்கள் தீட்டிக் கிண்டல் புரிந்த ஏடுகளும், இன்று புகழ்ந்துபாராட்டியிருக்கின்றன. அவர்களின் உள்ளமெல்லாம் மாறும் வகையில் ஒலி முழக்கம் செய்யும் ‘மனோகரா’வின் வெற்றி, தமிழின் வெற்றியாகும்.

அதனை உணர்ந்து, உருவாக்கிய, தயாரிப்பாளர்களையும் நடிகமணிகளையும், நமது கருணாநிதியையும் வாழ்த்துகிறோம்—பாராட்டுகிறோம்

★

புயல், போகுமாம்!

ஆச்சாரியார் போகப் போகிறாராம்! செய்திகள் வந்துகொண்டேயுள்ளன!!

'அந்நாள், என்று?' எனும் ஆனந்தத்தோடு, நாடு வரவேற்கிறது, இந்தச் செய்தியை.

ஒரு முதலமைச்சர், விலகுகிறார்! —அதனை, மகிழ்ச்சிக்குரிய சம்பவமாக மக்கள் கருதுகின்றனர்.

காங்கிரஸ் ஆட்சியில் 'கனம்'கள் பீடமேறியதையும் பிறகு வெளியேறியதையும், அடிக்கடி சந்தித்திருக்கிறது, நாடு. ஆனால், இதுபோது ஏற்படும் பரபரப்பு, எப்போதும், ஏற்பட்டதில்லை.

கஞ்சியில்லாத கலயத்தையும், பசிக்கும் வயிற்றையும் எண்ணிக்கொண்டு பாடுபடுபவனைச் சிக்கவைத்த மலைப்பாம்புபோல, திராவிடத்தின் அரசுக் கட்டிலில், அடிபெடுத்து வைத்தார், அன்பர்.

புயல் வருகிறது, என்றோம்—'புண்யர் வருகிறார்' என்றனர் காங்கிரஸ் நண்பர்கள்.

அவர்களும், இன்று பெருமூச்சுவிடுகின்றனர்—நம்மைப்போல அல்ல; நம்மைவிட அதிகமாக! காரணம், ஏறிய பீடத்திலிருந்தபடி, இம்மியளவும் அசைய மறுத்தார், ஆச்சாரியார். 'நவாப்'களின் காலத்துக்கு நாட்டை அழைத்துப்போக முயற்சித்தார்—அதற்கென ஒரு 'ஆமாம்' கூட்டத்தை அருகே சிருஷ்டித்துக்கொண்டார்.

அவர் வந்த வழி, கொல்லைப்புறம்! இப்போது செல்லும் வழியும், அதுதான்!!

வரும்போது இருந்ததைவிட, இப்போது, பெருத்ததோர் 'பரிசு மூட்டை'யைக் கொண்டுசெல்கிறார். அந்த மூட்டை—அவரது 'பாஷை'யில் சொல்லவேண்டுமானால்—பெரியதோர், பாவ மூட்டை!

ஏழை மக்களின் கண்ணீர்—அறுந்த தாலிகள்—உடைந்த குடும்பங்கள்—குழந்தைகளின் குமுறல்—மக்களின் ஆத்திரம் — ஆறு பிணங்கள்—அறுந்த கரங்கள் — வீழ்ந்த கைகள் — அந்த மூட்டையிலேயிருக்கின்றன. அதன் மீதிருக்கும் இரத்தக் கறையைப் போக்க, அவர் எத்தனை 'புண்ய தீர்த்தங்களுக்கு'ப் போனாலும், முடியாது. அப்பப்ப! கொஞ்சநஞ்சமா — கூறத்தான் முடியுமா.

டில்லியிலிருந்து இறங்கிவந்தார்—பெரிய மனுஷர்! என்றனர், சிலர். இப்போது, சொல்லக் கூசும் சொற்களைப் பரிசாகப் பெற்றுக்கொண்டு விலகுகிறார்! அல்ல—அல்ல—விலகும்படி செய்யப்பட்டிருக்கிறார்!

ஆச்சாரியாரது சிஷ்யகோடிகள் கூறுவர், "எங்கள் ராஜாஜி எதைச் செய்தாலும் பிடிவாதமாகச் செய்வார். பாருங்கள்! இந்தக் கல்வித் திட்டத்துக்கு எவ்வளவு பெரிய எதிர்ப்பு? கொஞ்சமாவது, இளகினாரா" என்று. இனி, இதுபோன்ற பெருமைக் குறிப்புகள், 'கல்கி'யிலும் பிற ஏடுகளிலும், நிறையக் கூடும்.

உண்மைதான்—பிடிவாதத்தோடுதான் செய்தார்! ஆனால், அந்தப் பிடிவாதம், அவருக்கு வழங்கும் பரிசுகள், என்ன! விபரம், வேண்டாம். மிகவும், வேதனையானது, அது

மக்கள் மன்றத்தின் செல்வாக்கைப் பெற்றிருந்த ஒரு பெரிய அரசியல்வாதி, அவர். மகாமேரு என்பர், அவருக்குள்ள ஆதரவு வழங்கிகளின் விபரத்தைக் காட்டி! அந்த மலை, மண்ணுக்குச் சமமாயிற்று—மக்கள் மன்றத்தில் சுயநலவாதி! சொந்த ஜாதிக்குச் சுகம் தேடுபவர்! மாற்றாருக்கு மதிப்புக்கொடாத மதோன்மத்தர்! – என்கிற இழிவையும் பழியையும் வழங்கியிருக்கிறது இந்தப் பட்டங்களைப் பெற அல்ல—அவர், ஆட்சியேறியது! ஆனால் அந்தப் பட்டங்களைத்தான் பெற்றுச் செல்கிறார்!!

'பஜ கோவிந்தம்', பாடியவண்ணம் திருக்குற்றாலத்து நிழலில், ஆன்ம விசாரணையிலீடுபடப் போவதாகச் சொல்லிவிட்டு, டில்லியிலிருந்து வந்தார்—சென்னைக் கோட்டையில் உலவும் வாய்ப்பு பெற்றார் ஏற்றிப் போற்றின, ஏடுகள்! அந்தப்போதையில், அவரும் ஆழ்ந்தார். 'இமயமலை' விட்டு இறங்கிவந்த 'ரிஷி' போல, மக்களுக்கெல்லாம்மா பெரும் உபதேசியானார்! ஆண்டவனுக்கும் மக்களுக்குமிடையிலும், நெருங்கிய தொடர்பை உண்டாக்கும் வேலையிலீடுபட்டார்!!

அவரை அழைத்தோரே, மிரளலாயினர். காங்கிரஸ் நண்பர்களே, கலங்கலாயினர்.

அவர் வந்த விபரத்தையும், ஆட்சியில் அமர்ந்த நிகழ்ச்சியையும் கண்டு, உலகம் சிரித்தது! நாடு திகைத்தது! தேய்ந்து போன காங்கிரஸ் கட்சியின் கூடாரத்துக்குள் 'தேள்' எனக் கருதப்பட்டோரையும், தீண்டப்படாதோர் எனக் கண்டித்தோரையும், தாசர்களாக்கும் முயற்சியிலீடுபட்டார்—பதவித் துண்டை வீசினார்-விபீஷணர்களும்,

---

அவர் கூறுகிறார்!

'எவ்வளவோ காலமாக நாம் திருமண விஷயத்தில் ஒரு முறையை அனுசரித்து வருகிறோம். அந்த முறை, ஆரியன் முறை என்பதில் சந்தேகமில்லை''

அண்ணாமலைப்பிள்ளை.
மேல்சபையில்!

அனுமார்களும், 'விலக்கு' வாங்கப் பட்டனர்.

'பஜகோவிந்தம்', பாப வழியில் பாய்கின்றதே என்றனர், பலர்.

'இதற்கா இவரை இட்டுவந்தோம்' என்றனர், சிலர்.

அன்று ஆரம்பித்த 'கபடநாடகம்', பிறகு பல்வேறு உருக்கொள்ளலாயிற்று. எதிர்த்தோரை மிரட்டினார்! பேசினோரை, சுட்டெரிப்பது போலப்பார்த்தார்! யாரையுமே மதிக்கவேண்டியதில்லை எனும், மமதைகொண்டார்.

அதன் விளைவாக, உருவாயிற்று, புதுக் கல்வித்திட்டம்! அப்போது தான், மூடிய விழிகள் பலதிறந்தன — ஆச்சாரியாரின் முழு உருவமும், தெரியலாயிற்று. அதன்பிறகு, அவருடைய நடவடிக்கைகள்யாவும், சர்வாதிகாரத்தின் எல்லைக்குச் சென்றன. ஜனநாயகத்தைக் கேலிச்சொல்லாக்கினார்— சட்டசபையின் தீர்ப்பை அவமதித்தார். சொந்தக் கட்சியினரையே, தூற்றினார்! ஏசினார்!! தி. மு. க மீது, பழிவாங்கும் படலத்தை, ஆரம்பித்தார்.

இன்று, போகிறார்—பலரும் சென்றவழியில், பழிமூட்டையைச் சுமந்தவண்ணம்!

ஆச்சாரியார் விலகுகிறார் எனும் செய்திையவிட ஆனந்தமளிக்கும் செய்தி, வேறெதுவுமில்லையென எண்ணுகின்றனர், மக்கள்.

அந்தளவுக்கு அவருடைய ஆட்டு மக்களின் பொறுமையைச் சோதித்துவிட்டது! மக்களை மதியாதளவுக்குப் போய்விட்டது!

ஆச்சாரியாரின் திறமையை, புத்தி கூர்மையை யாரும் மறுக்கமுடியாது —ஆனால், அத்தனையுமிருந்தும், அவைகள் யாவும் மமதையெனும் மண்ணுக்குள் புதைபட்டுப்போய் விட்டன. யாரையும் மதிக்கவில்லை! தானே, நாடு — தன் விரலே சட்டம்—எனும் மமதையுடன் உலவினார்!!

அதன் பரிசுதான், அவர் சுமந்து செல்லும், மூட்டை.

அவர் போகிறாராம்! செய்திகள் கூறுகின்றன!! செய்தி, உண்மையாகட்டும்,

★

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும்தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒருவாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்-

வெளிவந்துவிட்டது!

சி. என். ஏ.
தீட்டிய

பொன்னொளி

விலை அணா 4.

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபால் பில்லைகள் அனுப்புக. 20 பிரதிகளுக்குமேல் பெறுவோருக்கு 25-சதவிகிதம் கழிவு உண்டு.

'பவழ பஸ்பம்' தயாராகிறது!

பரிமளம் பதிப்பகம்
காஞ்சிபுரம்

உரிமைக் குரல்

காலனி ஆதிபத்யங்கள் அனைத்தும் அஸ்தமித்து வரும் இந்த நேரத்தில், சின்னஞ்சிறு பிரதேசங்களைத் தம் வசம் வைத்தவண்ணம் எங்கோ யிருக்கும் பிரான்ஸ், இன்னும் எதேச்சாதிகாரம் நடத்த விரும்புகிறது.

இந்த அக்கிரமத்தை, தி. மு. க. பலமுறை கண்டித்தே வந்துள்ளது. பிரெஞ்சிந்தியாவிலுள்ள சூழ்நிலைகளைப் பயன்படுத்திய வண்ணம் மக்கள் குரலுக்கு மதிப்பளிக்கவில்லை, அரசாங்கம்.

இப்போது, அந்த நிலைமைகள் யாவும், தகர்ந்துபோய், அந்நிய ஆதிக்கம் ஒழிய வேண்டுமென்ற குரல், ஓங்கி எழும்பியுள்ளது. இதனை அடக்கி ஒடுக்கிடும் முயற்சியில், பிரெஞ்சு ஆதிக்கம் முனையும் அறிகுறியும் தென்படுகிறது.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக தன்னுடைய சர்க்காரை மாற்றி மாற்றி அல்லாடினாலும், பிரெஞ்சு நாட்டிற்கு, ஆதிபத்ய ஆசைமட்டும் விட்டபாடில்லை.

இந்த அக்கிரமத்தை அழிக்கும் அறப்போருக்கு நல்லோர், ஆதரவு தரத்தயங்கார்.

வீறுகொண்டெழுந்திருக்கும் புதுச்சேரி—காரைக்கால் மக்களின் ஆர்வத்தை வாழ்த்துகிறோம்.

அந்நிய ஆதிக்கத்தை ஒழிக்கும் பிரச்னையை, வேறு காரணங்களுக்குத் திருப்பிவிட்டுவிடாமல், எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்து, விடுதலைக் குரலை எழுப்ப வேண்டும். இந்த அரிய முயற்சியில் கட்சி பேதமின்றி, கூட்டு முயற்சியுடன், பாடுபட வேண்டுமென பிரெஞ்சிந்திய தோழர்கள் யாவரையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பச்சைக் கொடி"யில், களங்கம்!

"பாடை கட்டித் தூக்கிச் சென்றார்கள்!"—எனும் செய்தியைக் குதூகலத்தோடு போடுகின்றன, ஏடுகள்.

காரணம் தெரியுமா? மக்களுடைய உணர்ச்சிகளை மதிக்கவில்லை. அதனால்தான் இந்தக் கதி" என்று இந்தியப் பிரமுகர்கள் விளக்கம் தருகின்றனர்.

"தாய்மொழியைப் புறக்கணித்து உருதுவுக்கு முக்கிய இடம் அளித்தனர். இது பிடிக்கவில்லை, மக்களுக்கு இந்தப் படிப்பினையை இங்குள்ள இந்தி வெறியர்கள் அறிய வேண்டும்" என்று பண்டிதநேரு குறிப்பிட்டிருக்கிறார்.

*

கராச்சியில் கலக்கம்!
பாகிஸ்தான் சர்க்கார் மாறுமா?
உலகத்தின் வியப்பு!
லீக் தலைவர்கள் குழப்பம்

என்று, பரபரப்பான செய்திகள் வந்துகொண்டுள்ளன. கிழக்கு வங்கத்தில் நடைபெற்ற தேர்தலின் விளைவுகள் சாதாரணமானவையல்ல. லீக், முறியடிக்கப் பட்டிருக்கிறது! உலகத் திரையிலேயே புது ராஜபத்தைச் சிருஷ்டித்த லீக், ஒப்பற்ற தலைவராம் ஜனாப் ஜின்னா அவர்களால் வளர்க்கப்பட்ட லீக், முஸ்லீம் இன மக்களுக்கு இதைத்தவிர வேறு கட்சியில்லை என்று வர்ணிக்கப்பட்ட லீக், மூக்கறுக்கப்பட்டிருக்கிறது, கிழக்கு வங்கத்தில்! தோல்வி யென்றால், சாதாரணமான தோல்வியல்ல. கிழ்வங்க லீக் தலைவர் முதன் மந்திரியாரை ஒரு மாணவத் தோழர் வெற்றிபெற்று வாகை சூடியிருக்கிறார்! பலமந்திரிகள் மண் கவ்வியிருக்கிறார்கள்! விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலே சிலர் மட்டுமே வெற்றி பெற்றிருக்கிறார்கள்! இந்தக் காட்சியைக் காணும்போது, எவருக்கும் கலக்கம் ஏற்படவே செய்யும். எனவே, இந்த முடிவுகளைக் கண்டு, பாகிஸ்தான் சர்க்கார் அதிர்ச்சி அடைந்ததென்றால் ஆச்சரியமில்லை. யாருமே இவ்வளவு பெரிய தோல்வியை எதிர்பார்த்திருக்கமுடியாது. கிழக்கு வங்கத்தில் வெற்றி பெற்ற ஐக்கியமுன்னணியாரே, இவ்வளவுபெரியவெற்றியைக் கண்டு, வியப்புற்றனராம்! லீக், தந்தை கட்சி—அதில் அங்கம்வகிப்போரெல்லாம் பாகிஸ்தான் பெற பாடுபட்ட தலைவர்கள்—மக்கள் மன்றத்தின் மதிப்பைப் பெற்றவர்கள்—மாணவர் தலைவராலும், அரசியல் பள்ளிக்குள் நுழைந்தவாலிபர்களாலும் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன என்றால், அது தரும் பாடம், சாதாரணமானதல்ல.

கிழக்கு வங்கத்தில் இன்று வெற்றி சூடியிருக்கும் ஐக்கிய முன்னணியில் பங்கு கொண்டுள்ள தலைவர்கள், மக்களுக்குப் புதியவர்களல்ல—மாறாக, ஆட்சியாளரின் பலவிதமான அடக்குமுறை அம்புகளுக்கு ஆளானவர்கள். லீக் கட்சியினரால், தூற்றப்பட்டவர்கள். அங்ஙனம் வசவு மாலைகளை, அவர்களுக்கு வீசப்பட்ட காரணத்திலேயே, இன்று வெற்றி மாலை சூடுமளவுக்கு அவர்களுக்கு மக்கள் மன்றத்தில் வரவேற்பு கிடைத்திருக்கிறது.

*

பாகிஸ்தானின் இரண்டு பிரிவுகளில், கிழக்கே இருக்கும் பகுதியில்தான், மக்கள் தொகை அதிகம். நூற்றில் 54 பேர், கிழ் வங்கத்தில் தானிருக்கிறார்கள். பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையில், அங்கம் வகிப்போரிலும், இங்கிருந்து சென்றோர் தொகைதான் அதிகம் இருக்கிறது. பாகிஸ்தான் மலர்ந்து ஆண்டுகள் ஏழாகியும், தனக்கென ஓர் அரசியல் திட்டத்தை அமைத்துக் கொள்ளாமல், காலம் தாழ்த்தி வரும் பாகிஸ்தான் சர்க்காருக்கு—வங்கத் தேர்தல், ஒரு இடியாகும். இப்போதே வங்கத்தின் எதிரொலி சிந்துவிலும், பஞ்சாபிலும், கேட்க ஆரம்பித்துவிட்டதாம். அங்குள்ள முஸ்லீம் லீக் தலைவர்களில் பலர், லீகைவிட்டு விட்டு, புதுக்கட்சி ஆரம்பிக்கலாம் என்று ஆலோசனைகள் செய்கின்றனராம். மேற்கு பாகிஸ்தானிலும் பொதுத் தேர்தல் வந்தால், லீக் கட்சியால் வெற்றி பெற முடியாதோ?—எனும் ஐயம், அவர்களுக்கும், வந்திருப்பதைக் காட்டுகிறது. இதனை உற்று நோக்கும் போது, எதிர்காலத்தைக் கடப்பது, லீகுக்கு ஒரு மாபெரும் காரியமாக இருக்கலாம்.

மிக மிகச் செல்வாக்கு பெற்ற லீக், இன்று சிதைகிறது! அதன் தலைவர்கள், கலங்குகிறார்கள்!! ஒரு காலத்தில் மலர்மாலை தூவிய மக்கள் இன்று பாடைகட்டி பரிகாசம் செய்கிறார்கள். காரணம் என்ன? மக்கள் மன்றம், லீகை, உதாசீனப்படுத்துகிறதே—ஏன்? இதற்கு தூண்டுதலாகப் பல விளக்கங்கள் தரலாம். ஆனால், ஒன்றுதான் முக்கிய காரணமாகும். மக்களுக்கு ஏராளமான ஆசைகளை வளர்த்திருந்தார்கள்! அந்த ஆசைகளை நிறைவேற்றாமல், ஆட்சியேறியோர், பாதை மாறிச் செல்ல ஆரம்பித்துவிட்டனர். எதிர்பார்த்தோர், ஏமாந்ததின் விளைவு—மாபெரும் தோல்வி. மாசு ஏற்படுத்திவிட்ட, தோல்வி. இந்தப் படிப்பினையைக் கண்டு, ஆனந்தகீதமும் ஆருடமும் கணிக்கின்றனர், இங்குள்ள காங்கிரஸ் நண்பர்கள்! இவர்களுக்கு தென்னாட்டில் ஏற்பட்ட கதிதான் இப்போது, அங்கே ஏற்பட்டிருப்பது!!

ஏஜண்டுத் தோழர்களுக்கு

மார்ச் மாதத்தோடு இவ்வாண்டுக் கணக்கு முடிக்கவேண்டியிருப்பதால், பாக்கி வைத்திருக்கும் ஏஜண்டுகள், முழுத் தொகையையும் 1–4–54–க்குள் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பாக்கி முழுவதும் அனுப்பாதவர்களுக்கு 4–4–54 முதல் பத்திரிகை அனுப்புவது நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி

4-ம் பக்கத் தொடர்ச்சி

முறையில் உடுத்தவும், மேனாட்டுத் துணிகளை ஆதரிக்கவும், இந்தியத் துணி, சுதேசி சாமான்கள் என்றால் அலட்சியமாக மட்டுமல்ல, வெறுத்துத் தள்ளவும் தலைப்பட்டனர். மேனாட்டாரைப்போல் நடப்பதும், நடிப்பதும், அவர்கள் நடையுடை பாவனைகளைப் பின்பற்றுவதுமே நாகரிகமென்றும், ஒரு இந்தியன் வெள்ளைக்காரன்போல் தோற்றமளித்தால் அதுவே நாகரிகத்தின் சிகரத்தை அடைந்து விட்டதாகவும் கருதப்பட்டது. இந்த அந்நிய நாகரிக மோகம் நெசவுத் தொழிலை நிலை தவறச் செய்தது.

நெசவுத் தொழிலின் வாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைத்தாற்போல் 1853-ம் ஆண்டு இந்தியாவில்முதன் முதலாக ஒரு நெசவாசலை ஏற்பட்டது. அதற்குப்பின் பம்பாயிலும் ஆமதாபாத்திலும் நூற்றுக் கணக்கான ஆலைகள் தோன்றின. குதிரை கீழே தள்ளினதுமன்றி குழியும் பறித்ததுபோல் லங்காஷயர் ஆலைகளின் போட்டி போதாதென்று இந்திய ஆலைகளின் போட்டியும் ஏற்படவும் கைத்தறிநெசவுத் தொழில் கதியற்று காப்பாற்றவும் ஆதரிக்கவும் ஆளின்றி அதன் நிலைக்கு இரங்குவாருமின்றிக் கைவிடப்பட்டது.

இருபதாம் நூற்றாண்டில் கைத்தறி நெசவுத் தொழிலைவிட ஆலைத் தொழில் வளர்ச்சியே அரசாங்கத்தின் கவனத்தை மிகவும் கவர்ந்தது. 1914-ல் துவக்கிய முதல் உலக மகா யுத்தம் ஆலைத் தொழிலுக்கு மிக்க ஊக்கம் அளித்தது. யுத்த காலத்தில் வெளிநாட்டுச் சரக்குகள் இங்கு வருவது நிறுத்தப்பட்டது. உள்நாட்டுத் துணித் தேவையில் பெரும் பகுதி இந்திய ஆலைகளாலேயே பூர்த்தி செய்யப்படவேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும் இந்தியாவை அடுத்த பல தூர கிழக்கு நாடுகளிலும் மேனாட்டுத் துணி கிடைக்காததால் இந்திய ஆலைத் துணிக்கே பெரும் கிராக்கி ஏற்பட்டது. இதனால் துணி விலை ஏறியது. அதன் காரணமாக இந்திய ஆலைகள் ஏராளமான இலாபம் சம்பாதித்தன.

முதல் யுத்தத்துக்குப்பின் திரும்பவும் வெளிநாட்டுச் சரக்குகள் இங்கு இறக்குமதிசெய்யப்பட்டன. அதனால் மிகவும் பாதிக்கப்பட்ட இந்திய ஆலை முதலாளிகளின் கூக்குரல் கிளம்பியது. அரசாங்கம்பாதுகாப்பு அளித்து ஆலைகளைக் காப்பாற்றியது. வெளிநாட்டுச் சரக்குகளுக்குப் பளுவான வரி விதிக்கப்பட்டது. அதனால் ஆலைத் தொழில் செழிப்புற்றது.

எவ்வளவுக்கு ஆலைத் தொழில் இங்கு ஆக்கம் பெற்று வளர்ந்ததோ அவ்வளவுக்கும் கைத்தறித்தொழில் வளங்குன்றியது. வளங்குன்றியதென்றாலும் அது அடியோடு அழிந்துவிடவில்லை. லாபகரமில்லை என்ற காரணத்தால் நெசவாளிகள் தங்கள் பரம்பரைத் தொழிலைக் கைவிட்டு விட்டு வேறு தொழில்களில் ஈடுபடவில்லை. வாழ்க்கைக்குத் தேவையான கூலியைக்கூட சம்பாதிக்க வழியின்றி தவித்தாலும் கைத்தறிக்காரர்கள் தங்கள் உயிர் உடலைவிட்டுப் பிரியாமல் காப்பாற்றி வந்தார்கள். அவர்கள் சாகாமல் பிழைத்துக் கொண்டு ஏதோ வாழ்க்கை நடத்திவந்தார்களே தவிர, நெசவாளர்கள் சமூகம் வாழவில்லை. அரசாங்கம் அவர்களை வாழவிடவில்லை.

1939-ல் இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்பித்தது. வெளிநாட்டுச் சரக்குகள் திரும்பவும் தடைபட்டுப் போயின. இந்திய அரசாங்கம் யுத்தத்திற்கான துணித் தேவைகளை இந்திய ஆலைகளிடமிருந்தே பெற்றுக்கொண்டது. அதனால், ஆலைகள் உள்நாட்டுத் தேவையை, முழுவதும் பூர்த்தி செய்ய முடியவில்லை. ஆலைகளை விஸ்தரிக்கவோ அல்லது புதிய ஆலைகளை நிறுவவோ முடியாமல் போய்விட்டது; வெளிநாட்டிலிருந்து இயந்திரங்கள் இறக்குமதி செய்யமுடியாத காரணத்தால். மேலும் யுத்த காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் தீர்ந்தது. வேலை செய்யத் தகுதி உடையவரெல்லாம், ஏதாவது ஒரு வேலையில் யுத்த காரியங்களிலோ, மற்றும் யுத்த சம்பந்தமாகவும் அதன் காரணமாகவும் ஏற்பட்ட எத்தனையோ புதிய வேலைகளிலோ அமர்ந்தனர். வேலை செய்தவர்களுக்கெல்லாம் அதிக நேர வேலைப்படி, பஞ்சப்படி, யுத்த நிவாரணப்படி என்ற பல காரணங்களால் எல்லோருக்கும் அதிக ஊதியம் கிடைத்தது. வியாபாரப் பெருக்கத்தின் காரணமாக வியாபாரிகளும் ஏராளமாகப் பணம் சம்பாதித்தனர். அதனால், பெரும்பாலான மக்களுடைய கையில் பணப்புழக்கம் அல்லது சாமான்கள் வாங்கும் சக்தி பெருகியது. ஒரு புறம் பணப் புழக்கம் அதிகரித்து மற்றொரு புறம் யுத்த நெருக்கடியினால் வாங்குவதற்குச் சாமான்கள் போதாத நிலை—இதனால் விலைவாசிகள் உயர்ந்தன. துணி விலையும் விஷம்போல் ஏறியது.

கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த கைத்தறி நெசவாளருக்கு இது ஒரு நல்ல வாய்ப்பைக் கொடுத்தது. என்றுமில்லாத கிராக்கியும் செல்வாக்கும் கைத்தறித் துணிக்குக் கிடைத்தது. விலை ஏற்றத்தால், மிகவும் லாபகரமாக மாறியது, கைத்தறித்தொழில். யுத்தத்துக்குமுன் சென்னை மாகாணத்தில் 1,50,000க்கு குறைவாகவே கைத்தறிகள் வேலை செய்தன. ஆனால் யுத்த காலத்தில் குறைந்தது 5 லட்சம் தறிகள் ஓய்வில்லாமல் வேலைசெய்தும் இந்த மாகாணத் துணித் தேவையைப் பூர்த்தி செய்யச் சிரமமாயிருந்தது.

இந்தச்சந்தர்ப்பத்தில் கைத்தறிக்காரர்களுக்கிருந்த பெருங்குறை போதிய நூல் கிடைக்கவில்லை என்பதுதான். நெசவாளர்களுக்குப் போதிய நூல் ஆலைகளிடமிருந்து கிடைப்பதற்கு அரசாங்கம் அவ்வப்பொழுது சட்டம் இயற்றியது. நூல் விலை ஏறாதபடி கட்டுப்பாடு செய்தது. ஆனால் நூலுக்கிருந்தகிராக்கி, நெசவாளர் கையில் மிதமிஞ்சிய பணப் புழக்கம் இவை இரண்டும் சேர்ந்து கட்டுப்பாடுகள், சட்டங்கள் இவைகளையும் மீறி கருப்பு மார்க்கெட் தோன்றியது. நெசவாளர் கருப்பு மார்க்கெட்டில் தகாத விலை கொடுத்து நூல்வாங்கினார்கள். அப்படி அதிக விலைகொடுத்து வாங்கியும், துணி விலை ஏறியிருந்ததால், அவர்கள் தொழில் லாபகரமாயிருந்தது.

நூல் கட்டுப்பாடு முதலிய தொல்லைகளைத் தீர்க்கக் கூட்டுறவுச் சங்கங்கள், வழியாகவும் இன்னும்

தனிப்பட்ட நூல் வியாபாரிகள் மூலமாகவும் நூல் பங்கீடு வினியோகம் செய்யப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களில் ஊழல் இன்றி நல்ல முறையில் நூல் கிடைத்ததால் நெசவாளர் பலரும் அவைகளில் அங்கத்தினர்களாகச் சேர்ந்தனர். கூட்டுறவு இயக்கம் என்றுமில்லாத ஒரு ஊக்கம் பெற்று வளரத் துவங்கிற்று.

யுத்த காலத்தில் நெசவாளருக்கு ஏற்பட்ட இந்த எதிர்பாராத சம்பத்து நெசவாளருடைய குறைகளைத் தீர்த்திருக்கும் என்று நினைக்கத் தோன்றுகிறதல்லவா? அது தான் நடக்கவில்லை. திடீரென்று நெசவாளர்க்குக் கிடைத்த செல்வத்தைக்கொண்டு அவர்கள் தங்கள் பழைய கடன்களைத் தீர்த்துவிடாமல், முன்னைவிட அதிக செலவு செய்தனர். நிறையச் சம்பாதித்தனர். நிறைய செலவுசெய்தனர். 'யுத்தம் ஒரு சமயம் நின்றுவிடுமே அப்பொழுது என்ன செய்வது' என்ற எண்ணமே எழவில்லை. இன்னும் பலர் தங்கள் வருமானம் அதிகரிக்க அதிகரிக்கத் தங்கள் கடன் வாங்கும் சக்தி அதிகரிப்பது கண்டனர். தங்களுக்கு ஒரு காலத்தில் கடன் கொடுக்க அஞ்சியவர்கள் இப்பொழுது தாமாகவேகடன்கொடுக்க முன்வருவதைக்கண்டு, ஏமாந்து மேன்மேலும் கடன்பட்டனர்.

யுத்தம் முடிந்தது. யுத்த காலத்தில் இலாபம் பெருகி புதிய வலிவும் பெரும் வளர்ச்சியும், அடைந்திருந்த ஆலைகள் இப்பொழுது தங்கள் முழு பலத்தோடு கைத்தறிகளுடன் போட்டியிட ஆரம்பித்தன. யுத்தத் துக்குப்பின் மக்களுடைய வாங்கும் சக்தி குறையத் துவங்கிற்று. வெளிநாட்டுப் போட்டித் திரும்பவும் தலை காட்டிற்று. பாகிஸ்தான், இந்திய கைத்தறித் துணி வாங்குவதை நிறுத்திற்று. இந்த நிலைமையில் கைத்தறித் துணிக்கு கிராக்கி படிப்படியாக குறையலாயிற்று. துணி விலை வீழ்ந்தது. எவ்வளவு திடீரென்று நெசவாளர் பணக்காரர்களாக மாறினார்களோ அவ்வளவு விரைவாகவே, ஏன் அதிலும் துரிதமாகவே, அவர்கள் ஏழைகளானார்கள்.

இந்தச் சூழ்நிலையில் கூட்டுறவுசங்கங்களால்கூட நெசவாளருடைய குறைகளைத் தீர்க்க முடியவில்லை. யுத்த காலத்தில், அதிகமாக ஆரம்பிக்கப்பட்டு ஏராளமான இலாபம் சம்பாதித்த கூட்டுறவு சங்கங்களின் நிலையே இப்பொழுது கவலைக்கிடமுள்ளதாக மாறிற்று.

கடந்த இரண்டாண்டுகளாக நெசவாளர் மிகுந்தகஷ்டங்களுக்காளாகி இருக்கின்றனர். வேலையின்றி அவர்களில் பலர் தங்கள் ஊர்களை விட்டு வெளியேறி இருக்கிறார்கள். பலர் பிச்சை யெடுக்கும்படியான நிலைக்கும் தள்ளப்பட்டுவிட்டனர். நெசவாளர் குடும்பங்களில் வறுமையைத் தாங்காது, பிள்ளைகளைக் கொன்றுவிட்டு புருஷனும் மனைவியும் தற்கொலை செய்துகொண்டதாக அடிக்கடி கோரச் செய்திகள் வெளிவருகின்றன. அவ்வளவு தரித்திரம் தலைவிரித்தாடுகிறது, நெசவாளர் மத்தியில்.

கைத்தறிக்காரர்களின் நலனைக் கருதிச் சென்னை சட்டசபையில் 1952-ம் ஆண்டு இறுதியில், வர்ணச் சேலைகளையும் கரைபோட்ட வேஷ்டிகளையும் கைத்தறிகளுக்கே ஒதுக்க வேண்டுமென்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்தக் கோரிக்கைக்குத் தேசம் பூராவுமே ஆதரவு இருந்தது.

அதன் பேரில் இந்திய சர்க்கார் "ஆலைகளில் 1951-ம் ஆண்டு உற்பத்தியான கரை போட்ட வேஷ்டிகளின் அளவில் 100 க்கு 60 பங்கு இனி உற்பத்தி செய்யலாம்' என்று உத்தரவு போட்டார்கள், அதாவது பாக்கி 100 க்கு 40 வீதம் கரை போட்ட வேஷ்டியை கைத்தறிக்கே ஒதுக்கப் பட்டது. இந்த உத்தரவு ஏதோ கைத்தறிக்கு ஓரளவுஉதவி செய்யும் என்பதாக தோன்றினாலும் ஊன்றிப்பார்க்கு மிடத்து அது கைத்தறிக் காரர்களுக்கல்ல, ஆலைகளுக்கே சாதகமானது என்பது தெரியவரும்

1952-ம் ஆண்டு ஆலைகள் கரை போட்ட வேஷ்டிகளை ஏராளமாக உற்பத்திசெய்தன. அவ்வளவையும் விற்க முடியாமல் தேக்கம் ஏற்பட்டு, 1951-ம் ஆண்டு, மாதம் ஒன்றுக்கு 50,000 கட்டுக்கள் வீதம் உற்பத்தி செய்துவந்த ஆலைகள், 1952-ல் தாமாகவே மாதத்தில் 40,000 கட்டுக்களே உற்பத்தி செய்தன. இதிலிருந்து இந்திய சர்க்கார் உத்தரவு ஆலைகளுக்கு ஏதோ ஒருபுதிய கட்டுப்பாடோ அல்லது ஆலை முதலாளிகளுக்கு விருப்பமில்லாத ஒன்றை அவர்கள்மேல் சுமத்துவதாகவோ ஆகாது.

இந்த உத்தரவினால் கைத்தறித் தொழிலுக்கு லாபம் ஏற்படுவதற்குப் பதிலாக மேலும் தொல்லையே ஏற்படும். கரை போட்ட வேஷ்டியை முழுவதும் கைத்தறிக்கென்று ஒதுக்கிவிட்டால், அதனால் இந்த ஒரு துறையிலாவது ஆலைகளின் போட்டியின்றி துணி உற்பத்தி செய்து சிரமமின்றி விற்றுப் பிழைக்கலாம்.

அப்படியில்லாமல் ஆலைகளுக்கு அறுபது பங்கு கைத்தறிக்கு நாற்பது பங்கு என்று ஒதுக்குவதனால் ஆலைப்போட்டி ஒழிந்ததாகக் கருத முடியாது. போட்டி என்று இருக்கும் வரை ஆலை முதலாளிகள் கைத்தறித் தொழிலை அழிக்கத்தான் முற்படுவார்கள். மலிவான நூலை எல்லாம் ஆலைகள்எடுத்துக்கொண்டு உயர்ந்த விலையுள்ள நூலை கைத்தறிக்கு ஒதுக்கிவிட்டு, கைத்தறி வேஷ்டிகள் அதிக விலையுள்ளது என்பதை நிரூபிப்பார்கள். அதனால் கைத்தறிக்கு உள்ளன்போடு உதவி செய்யவேண்டும் என அரசாங்கம் விரும்பினால் கைத்தறிக்கு ஒதுக்கின ரகங்களை ஆலைகள் தீண்டவும் கூடாதுஎன்று ஏற்படுத்தவேண்டும்.

ஆலைகளின் போட்டியைத் தவிர்த்து விட்டால் கைத்தறிக்காரர்கள் வேஷ்டிகளை அதிகவிலை வைத்து விற்பார்கள் என்ற ஒரு பயம் கிளப்பப்படுகிறது. இது காரணமில்லாத பயம் ஆலைப்போட்டியைத் தவிர்த்துவிட்டால், போட்டியே அஸ்தமித்து விடும் என்பது அர்த்தமில்லை. கைத்தறிக்காரர்கள் தங்களுக்குள்ளேயே போட்டியிட்டுக் கொண்டுதங்களுக்குக் கட்டிவரக்கூடிய ஒரு விலைக்குக் குறையாமலும் அதற்கு அதிகம் கூடாமலும் விற்பார்கள். அவர்கள் வறுமையின் காரணமாக அன்றாடம் உற்பத்தி செய்ததை அன்றே வயிறு வளர்க்க வேண்டிய நிர்ப்பந்தத்திலிருப்பவர்கள், பணம் படைத்த ஆலை

முதலாளிகளைப்போல் சரக்குகளைப் பதுக்கிவைத்தோ, தங்களுக்குள் கட்டுப்பாடுகள் ஏற்படுத்திக் கொண்டோ விலையை ஏற்றிவிடுவார்கள் என்ற பீதிக்கு இடமே இல்லை.

கைத்தறிக்கு கணிசமான நன்மை செய்ய வேண்டுமானால் அரை மனதுடன் அரை குறையாக உதவினால் முடியாது. கைத்தறிக்கு முழு ஆதரவு கொடுத்தால் ஒரு சில ஆலை முதலாளிகளின் எதிர்ப்புவரும் என்று அஞ்சும் அரசாங்கம் இலட்சக்கணக்கான கைத்தறி நெசவாளர்களின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் அவ்வப்போது சாந்தியாக ஏதோ கைத்தறிக்கு உதவியளித்து வருகிறது.

இந்த நிலையில் இவ்வருஷம் கைத்தறி வாரம் எங்கும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. கைத்தறி விழா கொண்டாடுவதால் நெசவாளியின் பிரச்சனையைத் தீர்த்துவிடலாம் என்று அரசாங்கம் எண்ணினாலும், அதனால் தங்கள் துயரமெல்லாம் பறந்துவிடும் என்று நெசவாளர் நம்பினாலும் அது தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வதாகவே முடியும். இந்தக் கொண்டாட்டத்தின் மூலம் நெசவாளர்களின் வாழ்வில் அரசாங்கம் அக்கறை காட்டுகிறது என்று வேண்டுமானால் மக்களை நம்பவைக்கலாம். ஆனால் இந்த விழா கைத்தறிக்குப் பெருமளவில் நிவாரணம் அளிக்கப் போகிறது என்று மக்களை நம்பவைப்பது வெறும் கண்துடைப்பு வேலை.

கைத்தறி வாரம் கொண்டாடுவதாலோ, மந்திரிகளும் பிரமுகர்களும் பிரச்சாரம் செய்வதாலோ கைத்தறித்துணிக்கு கிராக்கி ஏற்பட்டுவிடாது. அதனால் ஆலை முதலாளிகளிடம் கைத்தறித் தொழிலின் மேல் கருணை உண்டாகும்படி செய்து போட்டியைக் குறைத்துவிட முடியாது.

தேச பக்தி காரணமாகவோ, ஒரு சமூகம் படும் அல்லலை அகற்ற வேண்டுமென்ற அன்பின் காரணமாகவோ ஒரு சாமானை வாங்க வேண்டுமென்று வற்புறுத்தினாலும் ஒரு சிலர்தான் ஆதரவு தருவார்கள். அதிலும் ஒரு சிலர்தான் நிரந்தரமாகக் கொடுப்பார்கள். பொதுவாக மக்கள் அனைவரும் ஒரு சாமானை வாங்கும்போது முக்கியமாய்கவனிப்பது அதன் விலையைத்தான். கைத்தறித்துணி ஆலைத் துணியைவிட அழுத்தமாயிருக்கலாம், நாள்பட உழைக்கலாம். அதை ஆதரித்தால் ஏழையின் கண்ணீரைத் துடைக்கலாம். ஆனால்வாங்குபவர்கள் அதன் விலையைத்தான் கவனிப்பார்கள். ஆலைத்துணி மலிவாகவும், பார்க்க அழகாகவும் இருந்தால் அது நாள்பட உழைக்குமா என்பதை சிந்திக்காமலே அதைவாங்குவார்கள். எவ்வளவுதான் நெசவாளருடன் நெருங்கிய தொடர்பிருப்பவராயிருந்தாலும், நெசவாளர் நலன்கருதி அதிக விலை கொடுத்து, பார்வைக்குப் பகட்டாயில்லாத கைத்தறித் துணியை வாங்க மாட்டார்கள். ஜப்பான் சாமான்கள் இந்நாட்டில் வந்து குவிந்த காலத்தில் நமது மக்கள் தேசபக்தியால் தூண்டப்பட்டு நமது நாட்டுப் பொருளைத்தான் வாங்கவேண்டும் என்று நினைத்தார்கள்? உழைப்புக்குஉத்தரவாதங்கொண்ட பிரிட்டிஷ் அல்லது ஜர்மன் சாமான்களைத்தான் வாங்கினார்களா? அதிகநாள் உழைக்குமாவென்று சந்தேகம் இருந்தும்கூட, மலிவானதும் பார்வைக்குப் பகட்டானதுமான ஜப்பான்சாமன்களைத் தானே பாமர மக்கள் விரும்பிவாங்கினார்கள்.

அதனால், கைத்தறிவாரம் விமரிசையாகக் கொண்டாடிவிட்டால் மக்கள் மனம் மாறி இனி கைத்தறித் துணியைத்தவிர வேறொன்றும் வாங்கமாட்டார்கள், இனி கைத்தறிக்கு ஆபத்தில்லை என்று நினைப்பது சரியல்ல.

ஆனால் கைத்தறிவாரம் கொண்டாடுவது கைத்தறியின் இன்றைய இழிந்த நிலையைப்பற்றி ஆராய்ந்து பார்த்து, அந்த இழிவைப்போக்க வழிவகைகளைத் தேடுவதற்காகத்தான் என்று கொண்டால் அதனால் பயன் ஏற்படலாம்.

இன்று ஏன் கைத்தறித்துணியை மக்கள் ஆதரிப்பதில்லை என்பதற்கு முக்கியகாரணம் அதன் விலை அதிகமாயிருப்பதுதான். ஆலைகள் அதிக விலைக்கு நூல் விநியோகம் செய்கிறவரை இந்தக்குறை இருக்கத்தான் செய்யும். கைத்தறிக்குத் தரப்படும் நூல் விலையைக் குறைக்காமல் கைத்தறித்துணியின் விலையைக் குறைப்பதற்கு முயற்சி செய்தால் அது நெசவாளியின் கூலியை குறைப்பதிலேயேவந்து முடியும். இப்பொழுதே நெசவாளி பெறும் கூலி அரை வயிற்றுக்குக் கூடப் போதுமானதாக இல்லை. துணியின் விலையைக் குறைப்பதற்காகக் கூலியை இன்னும் குறைத்தால் காலுக்குத் தக்க மிதியடி தேடாமல், மிதியடிக்குத் தக்கவாறு காலைக்குறைக்க நினைத்ததைப் போலாகும்.

நெசவாளரிடையே நாணயமில்லை, 8 கெஜம் என்று துணி வாங்கினால் அது பிறகு 7 கெஜமாகச் சுருங்கிவிடுகிறது என்பது உண்மையான குறை. வறுமையின் காரணமாக ஏமாற்றுங்கருத்துடன் சில நெசவாளர் இவ்விதம் செய்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் ஒரு சிலரின் தவறினால் அந்தத் தொழிலுக்கே எவ்வளவு பாதகம் ஏற்படுகிறதென்பதை நெசவாளர் உணர வேண்டும்.

ஆலைத்துணியைப்போல் கைத்தறித்துணி கண்ணைக்கவரும்படி இல்லை என்பதும், கவர்ச்சி செய்யும் முறையில் விளம்பரம் செய்வதில்லை என்பதும் வேறு குறைகள். கைத்தறிக்காரன் மிகவும் எளியவன். அவன் பல ஊர் சுற்றிப்பார்த்து ஆங்காங்கு தேவைப்படும் மாதிரிகள், தரங்கள், இவைகளைப்பற்றித் தெரிந்து கொண்டு அதற்கொப்ப துணி தயாரிப்பதில்லை. அத்துடன் தக்க விளம்பரம் செய்வதற்கும் அவனிடம் போதிய முதலில்லை. கைத்தறிக் கூட்டுறவு சங்கங்களே இந்த காரியங்களில் அசிரத்தையாயிருக்கின்றன வென்றால் தனிப்பட்ட தொழிலாளியைப்பற்றி குறை கூறுவதில் பயனில்லை.

(தொடரும்)

> பிரிட்டிஷ் சர்க்காரின் ஆட்சியைவிட, இப்போதிருக்கிற அரசாங்கம் மோசமானது.
>
> —சகஜானந்தம்
> (சட்டசபையில்)

தஞ்சை மாவட்ட
இரண்டாவது திராவிட முன்னேற்றக் கழக

சமூக சீர்திருத்த
அரசியல் மாநாடுகள்

முத்தமிழ் வள்ளல் ஏ. ஒய். ஏ. நாடார் அவர்கள் தோட்டத்தில்

தஞ்சையில் நடைபெறும்.

10–4–54 சனி

சமூக சீர்திருத்த மாநாடு

தலைவர்: ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.

திறப்பாளர்: க. அன்பழகன் எம். ஏ.

11–4–54 ஞாயிறு

அரசியல் மாநாடு

தலைவர்: என். வி. நடராசன்

திறப்பாளர்: ஈ. வி. கே. சம்பத்

பொதுச் செயலாளர்
அண்ணாதுரை
தி. மு. க.
முன்னணி வீரர்கள்,
பாராளுமன்ற
சட்டசபை
அங்கத்தினர்கள்
கலந்து
கொள்வார்கள்.

இரண்டு
நாட்களிலும்
அண்ணாதுரை
எழுதிய
சீர்திருத்த
இயக்க
நாடகங்கள்
நடைபெறும்

கட்டணம்:- வரவேற்பாளர் ரூ. 5; பிரதிநிதி ரூ. 2;
பார்வையாளர் ரூ. 1. பெண்களுக்கு 0–8–0

எஸ். பெத்தண்ணான், பொருளாளர்.

ஏ. வி. பதி, செயலாளர்.

கே. கே. நீலமேகம், வ. கு. தலைவர்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.